தென்மொழி

உரிமைக் குரல்...!

ஈழத் தமிழரைப் பூண்டோ ழிக்க
ஆழக் குழிசெய் சிங்களர் அழிம்பு
மூண்டெழுந் தீயாய் தீண்டும் நஞ்சாய்
யாண்டும் பரவுதல் தொடர்ந்துகொண் டுள்ளது
ஆங்குள தமிழர் நம்மவர் என்பது
ஏங்கும் ஆசையால் இயம்புவ தன்று
நன்மக்களாக நந்தாய் ஈன்ற
முன்மக்கள் அவர்கள் அந்தோ இந்நாள்
அரசியல் கரணியம் ஆயிரம் ஆயினும்
உரசிப் பார்க்கும் நேரமீ தன்று
நோயும் பசியும் நொடிதொறும் வாட்ட
மாயுங் கொடுமையே மக்களின் நிலைமை!
சாகுந் தமிழரைக் காத்து நிற்பவர்
ஈக வுணர்வின் போரா ளியரே
விடுதலைப் புலிகளும் இல்லையேல் தமிழர்
படுகொலை யாலே முடிவுற் றிருப்பர்
தடையென வழுக்கிக் கொள்வதும் பழியென
விடைசெய்து ஒருவாறு விலகிச் செல்வதும்
கடமை யுணர்ந்தோர் கைக்கொளத் தக்க
திடம்படு நடையெனத் தெளிதலோ இல்லை!
அடிகள் காந்தியின் உயிரைப் பறித்த
கொடிய கயமைக் கட்சியும் நாட்டில்
நயன்மை பேசி நடமாடு கின்றமை
அயன்மைச் செய்தி யன்று கண்கூடு
அமிழாச் சிறப்பின் வழிமர புடைய
தமிழன மக்களைக் காத்தற் கெழுநரை
ஒடுக்கலும் அவர்தம் உரிமைக் குரலைத்
தடுத்தலும் அறவோர் தகுதியா காதே!

- இறை

உள்ளே...

பண்பாட்டுச் சிதைவுகளின் விளைவுகள்!

பெருஞ்சித்திரனாரின் விடுதலையுணர்வு!

முதல்வர் கலைஞர்க்கு ஒரு வேண்டுகோள் மடல்

தூய தமிழ்க் கவலைகள் அறுபத்து நான்கு

மக்களவை

"கள்" போட வேண்டாம் - பாடல்

உழவர் திருநாள் வாழ்த்து

செய்திகள்

மற்றும் பிற...

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

சுவடி - 28
ஓலை - 12

தி.பி. 2027 சிலை - 1996 திசம்பர்

மூளைக் குழப்பக்காரர்களும், முடிச்சு மாறிகளும்

ஒரு புறம் 'புராணம்' படிப்பது; மறுபுறம் 'அறிவியல்' வளர்ப்பது. ஒரு பக்கம் 'பிள்ளையாருக்குத் தேங்காய் உடைத்தால் படிப்புவரும்' என்பது. மறுபக்கம் பள்ளிக்கூடப் பாடத் திட்டங்களை அடிக்கடி சீர்திருத்துவது. ஒரு புறம் கோயில் குடமுழுக்குகளைச் செய்து கூத்தடிக்கவும் கொள்ளையடிக்கவும் வாய்ப்பளிப்பது; மறுபுறம் சீர்திருத்தச் சட்டங்களையும், காவல் கண்காணிப்புகளையும் பெருக்குவது. ஓரிடத்தில் பிள்ளை பெறுவதும், செல்வம் பெறுவதும் தெய்வத்தின் செயல் என்று வாரிகளையும் பூரிகளையும் வைத்துக் கதையளப்புகளைச் செய்ய இடந்தருவது, மறுபுறம் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களையும், நிலச் சீர்திருத்தங்களையும், செல்வ வரம்புகளையும் கொண்டுவரச் சட்டங்களைப் போடுவது. ஒரு பக்கம் போலிப் பொருள்களையும், அவை பற்றிய புனைசுருட்டு விளம்பரங்களையும், வானொலியிலும், செய்தித்தாள்களிலும் செய்யவும், தெருக் கடைகளில் விற்கவும், அரசினரே வாய்ப்பளிப்பது; மறுபக்கம், அவற்றால் நாட்டுக்குக் கெடுதி - மக்களுக்குக் கெடுதி - என்று மருத்துவர்களையும் அறிஞர்களையும் கொண்டு அதே வானொலியிலும் செய்தித்தாள்களிலும் கதையளப்புகளைப் பண்ணச் செய்வது. ஒருபுறம் காலிப்பயல்களையும் கூலிக்கலைஞர்களையும் விட்டுப் படுகீழ்மையாகவும், கயமையாகவும் பாட்டெழுதவும், படமெடுக்கவும் செய்து மக்கள் கெட்டுப்போக அரசினரே வழி வகுப்பது; மறுபுறம் மக்கள் பண்பாடு சீர்குலைவதற்கும், கேடுகள் மலிவதற்கும் குழுக்களைப் போட்டுக் கரணியங்களை ஆராய்ந்து, 'வழு'க்களைக் கண்டு பிடித்துக், கோடிகோடியாய்ப் பணத்தைச் செலவழித்து அறம் பேண முயல்வது.

- இவையெல்லாம் மூளைக் குழப்பக்காரர்களும், முடிச்சு மாறிகளும் நிறைந்த நாட்டில்தான் நடக்க முடியுமே தவிர, கொஞ்சமேனும் அறிவுள்ளவர்கள் உள்ள நாடுகளில் நடைபெற முடியாது. ஒருவனைப் 'பூணூல்' போடுவதற்கும், 'பிரமன்' என்னும் 'பொட்டை'யனின் முகக்குறியில் தோன்றினான் என்பதால் 'பிராமணன்' என்று அழைத்துக் கொள்வதற்கும், சட்டப்படி உரிமை கொடுத்துவிட்டு, இன்னொரு புறத்தில் தீண்டாமைத் தடுப்புச் சட்டம் கொண்டுவருவதும், மண்டுகள் அமைச்சர்களாய் உள்ள இந்த நாட்டில்தான் நடக்கும்! - இவ்வாறு வறுமைக்கு, மூட நம்பிக்கைக்கும் வழி திறந்து விட்டு விட்டு, அவற்றைப் போக்குவதற்கு அதிகாரத்தையும் ஆளுமையையும் பயன்படுத்தி - உமிக் குத்திக் கைநோகும் உன்மத்தம் பிடித்த அரசை உலகில் வேறு எந்த நாட்டிலும் காணவே முடியாது.

பாவலரேறு - தென்மொழி சுவடி : 12 - ஓலை : 3 (1975)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி.பி.1990 (1959)

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்



தென்மொழி

மொழி—இனம்—நாடு

நம்முமச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

ஆசிரியர் : தாமரை பெருஞ்சித்திரனார்

சுவடி : 28) தி.பி.202எ - சிலை (திசம்பர் - '96) (ஓலை - 12

பண்பாட்டுச் சிதைவுகளின் விளைவுகள்!

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மருத்துவக் கல்லூரி மாணவரொருவர் மிகக் கொடுமையாகச் சிதைத்துக் கொல்லப்பட்டிருக்கிறார். கொலை பற்றிய முழு விளக்கமும் தெளிவாகத் தெரியாவிட்டாலும், கல்லூரி மாணவர்களிடையே கல்வி யாண்டின் தொடக்கத்தில் நடைபெற்றுவரும் அரம்பத்தனத்தாலேயே இக் கொலை நடந்திருப்பதாகக் கருதப்பட்டு, அதன்மீது கண்டனங்கள் பாய்ந்துள்ளன. அக் கொடிய செயல் அடியோடு அகற்றப்படும் என்று அறிவித்து அதற்கெனச் சட்டங் கொண்டுவர அரசு முனைந்துள்ளது.

கயவாளித் தனமான இந்த அரம்படி கலைத்துறை மாணவர்களைவிட மருத்துவம், பொறியியல் போலும் வளமார் கல்வி பயிலும் மாணவர்களையே பெரிதும் மேட்டுக்குடி மனப்பான்மை எனலாம். தமக்குச் சமமாக் மற்றவர்களும் இடம் பெறுவதை ஏற்றுக் கொள்ள முடியாத மன அழுத்தம், தமது தலைமைத் திறத்தை ஏனையவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும்; தமக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்ற வல்லாண்மை மனப்பான்மை ஆகியவை மாணவர்களுள்ளும் சிலரை ஆட்டிவைக்கின்றது. தமக்கு முந்திய மாணவர்களிடத்தில் தாம்பட்ட இழிவுகளைத் தமக்குப் பின்வரும் மாணவர்களிடத்தில் பழிதீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணமும்

இதற்குத் துணைநிற்கின்றது. கூச்சந் தெளிவித்தல் அதிரடி வரவேற்பு என்று தொடங்கியதாகக் கூறப்படும் அரம்படி இன்று வன்முறை வெறியாக வரம்பு மீறிக் கொடுங் கொலையளவுக்கு வளர்ந்திருப்பதற்கு அடிப்படைக் காரணம் குமுகாயத்தில் பரவிவரும் பண்பாட்டுச் சிதைவே!

கொலை, கொள்ளை முதலிய கொடுஞ் செயல்களெல்லாம் தலைமைத் திறங்களாகவும் வினைப்பாடுகளாகவும் அருஞ்செயல்களாக வும் ஏடுகளால் வரணிக்கப்படுகின்றன.

அறிவுக்குப் பொருந்தாதன வென்று வெளிப்படையாகத் தெரியும் நிகழ்ச்சிகளும் குறுக்குவழி முயற்சிகளும் போலிப்புராணங்களைவிட இழிந்தனவாக இருந்தும் திரைப்படக்காரர்கள் பணம்பண்ணும் நோக்கத்தோடு பரபரப்புக் கருதிப் பெருமைப்படுத்திக் காட்டுகின்றனர். எவ்வகைத் தடையுமில்லாமல் அவை வெளிவந்து மக்களை மூளைவெளுப்புச் செய்துகொண்டிருக்கின்றன.

தொலைக்காட்சியின் அனைத்து அலைவரிசைகளும் போட்டி போட்டுக்கொண்டு திரைப்படங்களைத் தவிர உலகில் வேறு ஒன்றுமே இல்லை என்பது போல் பல்வேறு வடிவங்களில் நாள்முழுதும் ஒளிபரப்பிக் கொண்டிருக்கின்றன. விளம்பரக்காரர்கள் போட்டி - பரிசளிப்பு என்று திரைப்படக் கூறுகளிலேயே மக்களுக்கு நாட்டத்தையும் ஈடுபாட்டையும் மிகுத்துக் கொண்டிருக்கின்றனர்.

நாடகங்களிலெல்லாம் நகைச்சுவை என்னும் பெயரில் காதுகொடுத்துக் கேட்க முடியாத அருவருப்பான உரையாடல்களே அரங்கேற்றப்படுகின்றன.

திரிபு மனங்கொண்ட விடலைப் பயல்களின் விலங்கினுங் கடைப்பட்ட ஓரினச் சேர்க்கையான பாலியல் உணர்வுகளையும் ஒழுக்கக் கேடுகளையும் நயன்மைப்படுத்திக் காட்டியும் உரிமையெனப் பெயர்சூட்டியும் புதுமையெனப் புனைந்துரைத்தும், அவர்கள் கட்டிப்பிடித்துக் கொள்வதையும் கணையாழி மாற்றிக் கொள்வதையும் பல்வண்ணப் படங்களாக அச்சிட்டுப் பரப்பும் நூல்களும் இதழ்களும் தங்கு தடையில்லாமல் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

மனவுணர்வைச் செழுமைப் படுத்தி இன்புறுத்துவனவும் வேலைக் களைப்பைப் போக்கிப் புத்துணர்வூட்டுவனவுமான கலைகள் நாளுக்கு நாள் அருகிவர, பேய்க் கூச்சலிட்டுக்கொண்டு, கால் கை வலிப்புக் கொண்டவன் உதைத்துக் ,கொள்வது போன்ற ஆட்டங்கள் பெரிது படுத்தப்படுகின்றன; பெருகிவருகின்றன. அந்த ஆட்டக்காரர்கள் உலகத் தலைவர்களாக மதிக்கப்படுகின்றனர்.

கோடிக் கணக்கில் பொருட் செலவிட்டுப் பெண்களைக் காட்சிப் பொருளாக்கிக் கணக்கீடு செய்யும் உலக அழகிப் போட்டியை, எத்தனைப்பேர் எடுத்துரைத்தாலும் பொது நல அமைப்புகள், பெண்ணுரிமை அமைப்புகள் போராடினாலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. அந்த அளவுக்கு வலிமை பெற்றவர்கள் இத்தகைய கவர்ச்சிப் பணிகளை ஊக்கத்துடன் செய்கின்றனர். அரசு அதனைத் தடுத்து நிறுத்தாததுடன் அதற்குத் துணையாகவும் நிற்கிறது!

கொலையாளிகள், கொள்ளைக்காரர்களில் சிற்சிலர் அடையாள முறையாகப் பிடிக்கப்படலாம்; அவர்களில் சிலர் தண்டிக்கப் படவுங்கூடும். ஆனால் அவர்களுக்கும் பின்புலமாணவர்கள் மக்கள் முன் கொணரப்படாமலே இருக்கின்றனர். அவ்வர்கள் எப்போதும் போல் அடுத்த கும்பலுக்கு வலைவீசிக் கொண்டிருக்கிறார்கள். அடுத்தடுத்து வரும் புதிய புதிய ஆட்சியாளர்களை வரவேற்க, அவர்கள்தம் வளமனைகளில் மலர்மாலைகள் நிறைந்து கொண்டே இருக்கின்றன.

அரசியல் கட்சிகள் எவையாயினும் பெரும்பாலும் அவற்றிலெல்லாம் கள்ள வணிகம், கள்ளக்கள் வணிகம் முதலானவற்றில் ஏதோ ஒரு வகையில் ஈடுபட்டிருப்பவர்களோ, அவர்களைப் பின்புலமாகக் கொண்டவர்களோ, கையாள்களோ மட்டுமே பொறுப்புக்கு வருகின்றனர்; வரமுடிகிறது என்பது கசப்பான உண்மை!

குற்றங்களைத் தடுக்கவும் குற்றம் செய்தவர்களைத் தண்டிக்கவும் சட்டங் கொணர்வது வரவேற்கத் தக்கதே. ஆனால், அடிப்படைத் தவறுகளைக் கண்டுங் காணாமலும் விட்டுவிட்டு வெளிப்படுந் தவறுகளை தடுத்து நிறுத்த முற்பட்டால் எத்தனைச் சட்டங்களாலும் அதை நிறைவேற்றிவிட முடியாது. கழிவுநீர்க் குட்டத்துக்கு வடிகால் காணாமல், அல்லது அதனைத் தூர்க்காமல் கொசுவை ஒழிக்க

தென்மொழி

தூயதமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்
(ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.)

ஆண்டுக்கட்டணம்	உருபா.	48.00
அரையாண்டுக்கட்டணம்	உருபா.	24.00
தனியிதழ்	உருபா.	4.00

வெளிநாட்டுக் கட்டணம்

1. வானூர்திவழி ஆண்டுக்கட்டணம் – 300/–
2. கப்பல்வழி ஆண்டுக்கட்டணம் – 200/–

பெருஞ்சித்திரனாரின் விடுதலையுணர்வு!

தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா

பாவலரேறு பெருஞ்சித்திரனார் சிறந்த தமிழறிஞர். பெரும் பாவலர். தமிழினத் தொண்டர். தமிழினத் தலைவர். அவர் தமிழ் மக்களுக்காகத், தமிழ் மொழிக்காகத், தமிழினத்துக்காகச் செய்த தொண்டுகள் பல. எவ்வெவ் வகையிலெல்லாம் தமிழினத்துக்குத் தொண்டு செய்ய முடியுமோ, அவ்வவ் வகையிலெல்லாம் தொண்டு செய்து நின்றார். அவர் யாருக்கும் அஞ்சவில்லை. எந்த ஈகத்தையும் செய்யத் தயங்கவில்லை.

அவர் தமிழ் நாட்டுக்காகச் செய்த தொண்டுகளைக் கீழ்க்காணும் வகையில் பகுத்துரைக்கலாம்.

1. மத - சாதி தொடர்பான மூடவழக்கங்களையும், பார்ப்பனர் தமிழ் நாட்டில் கொண்டிருக்கும் வல்லாண்மையையும் அழித்தொழித்துத் தமிழ் மக்களின் நலங்காத்தல்.

2. தமிழில் பிறமொழிக் கலப்புகளைக் களைந்து தூய தமிழை (தனித் தமிழை) வளர்த்தல்.

3. இந்தி திணிப்பு எதிர்ப்பு.

4. தமிழைத் தமிழ்நாட்டின் பயிற்றுமொழியாகவும், ஆட்சி மொழியாகவும் ஆக்குதல்.

5. தமிழுக்குத் தொண்டு செய்த, செய்கின்ற அறிஞர்களைப் புரத்தல்.

6. தமிழ் நாட்டு விடுதலைக்காகப் போராடுதல்.

(மேற்குறித்த தமிழ்நாட்டுத் தமிழருக்கான தொண்டுகளோடு கூட, தமிழ் ஈழ விடுதலைப் போருக்குத் தொடக்கக் கால முதல் தம் இறுதி நாள் வரையிலும் துணைநின்றார். அவரது தமிழீழ விடுதலைக்கான தொண்டுகளைப் பற்றித் தனிக் கட்டுரையே எழுதலாம்.)

அவர் தாம் தமிழ் நாட்டு மக்களுக்காகச் செய்த தொண்டுகளில் தலையானதாகக் கருதியது, தமிழ் நாட்டு விடுதலைக்காகச் செய்த பணிகளையே என்பதை அவர் எழுதிய கட்டுரைகளையும், செய்த செயல்களையும் ஆய்ந்து பார்ப்பார் உணர்வர். அதனைச் சற்றே விளக்குவம்.

பெருஞ்சித்திரனார் பாவாணர் மீது பெருமதிப்பு வைத்திருந்தார். தாம் தென்மொழி இதழைத் தொடங்கியதற்கான காரணங்களில் ஒன்று பாவாணரின் தனித்தமிழ் மற்றும் சொல்லாய்வுக் கருத்துக்களை மக்களிடையே பரப்புவது தான் என்று எழுதியிருக்கிறார். பிற்கால், அன்றைய தமிழ்நாட்டு அரசோ, பல்கலைக் கழகங்களோ பாவாணரின் சொல்லாய்வு முயற்சிகளுக்குப் பணஉதவி தராத நிலையில், பெருஞ்சித்திரனாரே தனிப்பட்ட முறையில் தென்மொழியின் வழியாகப் பணந்தண்டிப் பாவாணரின் சொற்பிறப்பியல் ஆராய்ச்சிகளுக்குத் துணைநின்றார். இப்படி அவர் பெருமதிப்பு வைத்திருந்த பாவாணர் ஒருமுறை பெருஞ்சித்திரனாரிடம் 'நீங்கள் உங்களது தமிழ் நாட்டு விடுதலைக்கான செயல்களை விட்டு விட்டுத் தனித்தமிழ், மொழியாய்வு அனைய பிற முயற்சிகளில் முழுமையாகச் செயல்பட வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார். பெருஞ்சித்திரனாரோ 'நான் தமிழ் நாட்டு விடுதலைக்காகப் போராடுவதை விட முடியாது' என்று விடையிறுத்தார்.

பெருஞ்சித்திரனார் உலகம் யாண்டும் வாழும் தமிழ் மக்களின் நலங்கருதி உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தைத் (உ.த.மு.க) தொடங்கினார். பல ஆண்டுகளாக அதன் முதல்வராகவும் (தலைவராகவும்) இருந்தார். 1992-இல் உ.த.மு.க.வைச் சேர்ந்த அன்பர்கள் சிலர் அவரிடம் 'நீங்கள் தமிழ்நாட்டு விடுதலைக் கொள்கையை விட்டுவிட்டு உ.த.மு.க.வை வளர்ப்பதில் முனைப்பாக ஈடுபடவேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்கள். பெருஞ்சித்திரனார் 'நான் எந்த நிலையிலும் தமிழ் நாட்டு விடுதலைக் கொள்கையைக் கைவிட மாட்டேன்' என்று கூறினார்.

1985 வாக்கில் பேராயக் கட்சியைச் சேர்ந்த தமிழ் நாட்டுத் தலைவர் ஒருவர் பெருஞ்சித்திரனாரிடம் 'நீங்கள் தமிழ் நாட்டு விடுதலைக் கொள்கையை விட்டுவிட்டால் இந்தியத் தலைமையமைச்சர் இராசீவ் காந்தி உங்களுக்குப் பலவகையில் நன்மைகள் செய்வார். இது குறித்து அவர் உங்களிடம் பேச விரும்புகிறார். அவரை விரையிலேயே நீங்கள் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்கிறேன்' என்று சொன்னார். 'நான் தமிழ்நாட்டு விடுதலைக் கொள்கையைக் கைவிடப் போவதில்லை. இராசீவ் இதைப் பற்றிப் பேச விரும்பினால் நான் அவரைச் சந்திக்க வேண்டியதில்லை' என்று சொல்லி இராசீவ் காந்தியைப் பார்க்க மறுத்துவிட்டார் பெருஞ்சித்திரனார்.

பெருஞ்சித்திரனார் தமிழ் நாட்டு விடுதலைக் கொள்கையைக் கைவிட முன் வந்திருப்பாரானால், இராசீவ் காந்தி நடுவணரசின்

வழி அவருக்குப் பல நன்மைகள் செய்து அவரது வாழ்வை வளப்படுத்தியிருக்கக் கூடும். அவரும் நல்ல செல்வ வளத்துடன் தனித்தமிழ் வளர்ச்சி, இலக்கியப் படைப்புகள் ஆகிய பணிகளில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால் இவற்றையெல்லாம்விடத் தமிழ்நாட்டு விடுதலைக்காக உழைப்பதே முகாமையான பணி என்று கருதினார் பெருஞ்சித்திரனார். அதனால் தான் யார் அன்புடன் கேட்டுக் கொண்டாலும் சரி, பணம் கொடுத்து விலைக்கு வாங்க முயன்றாலும் சரி, எந்த நிலையிலும் 'தமிழ்நாட்டு விடுதலை தேவை' என்று முழங்கி நின்றார் பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

அவரது தமிழ் நாட்டு விடுதலைக் கொள்கையாலும், அதற்காக அவரெடுத்துக் கொண்ட முயற்சிகளாலும் அவர் கொண்டிருந்த தனித்தமிழ் வளர்ச்சி, மத - சாதி மூட நம்பிக்கைகள் ஒழிப்பு, இந்தியெதிர்ப்பு இன்ன பிற தமிழ்ப் பணிகள் ஓரளவுக்குப் பின் தள்ளப்பட்டாலுங்கூட, அவர் தமிழ்நாட்டு விடுதலைப் பணியையே தமது முகாமையான பணி என்று கருதியமை ஏனென்றால், தமிழ் நாடு விடுதலை பெறாத அளவில் - தமிழ் நாடு இந்திக்காரனுக்கு அந்தந்த நேரங்களில் மட்டும் அடிமைப்பட்டுக் கிடக்கும் அளவில் - பிற பணிகளெல்லாம் முழுப்பயன் விளைக்காது, காற்பயனும், அரைக் காற்பயனும் விளைக்கக் கூடும், அவ்வளவுதான் என்பதை அவர் உணர்ந்திருந்தமையே காரணம். இக் கருத்துகளை அவ்வப்போது தமது கட்டுரைகளிலும் சொற்பொழிவுகளிலும் விளக்கியிருக்கிறார்.

இக் கருத்துகளின் சுருக்கத்தை 'தமிழ இனமே! தமிழ இனமே!' என்ற பாடலில் தந்துள்ளார்.

'தமிழகம் பிரியா திருப்பது தவறெனற்(கு)
அமிழாக் கரணியம் பத்தென அறைக!
ஒன்றே, தமிழ்மொழி உயர்நிலை கெடுமே!
இரண்டே, இந்தி என்றையும் புகுமே!
மூன்றே, சமயமும் குலமும் மூட்டிய
ஆன்ற புரட்டினை அகற்றலும் அரிதே!
நான்கே, பார்ப்பனன் நச்சுத் தன்மையால்
தீங்குறும் இனத்தினைத் தேற்றலும் அரிதே!
ஐந்தே, தமிழ்ப்பண் பாடகன் றொழிமே!
ஆறே, தமிழ் மொழி இலக்கிய இலக்கணம்
வேறு வேறாய் விலகி யழியுமே!
ஏழே, சமசுகிருதம் எழுந்து
பாழெனத் தமிழரை அடிமைப் படுத்துமே!
எட்டே, தமிழினம் இனியும் சிதறிக்

கெட்டுப் படிப்படிக் கீழ்மையுற் றழிமே!
ஒன்பதே, பொதுநிலை யுடைமை நிரம்பிய
மன்பதை இங்கு மலர்த்துதல் அரிதே!
பத்தே, அரசியல் அதிகார நிறைவே
எத்தானும் எய்துதல் இயல்வதாகாதே"

தமிழ்நாட்டுக்காகச் செய்ய வேண்டிய பணிகளெல்லாம், தமிழ் நாட்டு மக்கள் அதனால் அடைய வேண்டிய நலங்களெல்லாம் தமிழ்நாடு விடுதலை பெறாத நிலையில் முழுமையாகா என்பதைப் பத்தொன்பதே வரிகளில் சொல்லியிருப்பதைப் பாருங்கள்.

இங்குச் சுருக்கமாகப் பாட்டளவில் கூறியவற்றைப் பல கட்டுரைகளிலும், சொற்பொழிவுகளிலும் விளக்கமாக விரித்துரைத்திருக்கிறார். பழைய 'தமிழநிலம்' இதழ்களில் கொட்டை எழுத்தில் 'தமிழ்நாடு விடுதலை பெறுவது நம் அனைவருக்கும் உண்டான ஒரு குறிக்கோளாக இருக்க வேண்டும்', 'தமிழ்நாட்டின் அனைத்து அரசியல், பொருளியல், தொழிலியல், உழவியல், இனவியல் சிக்கல்களுக்கு ஒரே தீர்வு தனித் தமிழ்நாட்டுக் கோரிக்கையே', 'தனித் தமிழ்நாடு பெறுவதே தமிழர்களுக்குக் குறிக்கோளாக இருத்தல் வேண்டும்' என்பன போன்ற தலைப்புகளையும், அவற்றுக்கான விளக்கங்களையும் பார்க்கலாம்.

தமிழ்நாட்டு விடுதலையொன்றே தமிழ்நாட்டு மக்களை இந்திக்காரனின் வல்லாளுமையினின்று விடுவித்து, இந்திக்காரன் நம்மைச் சுரண்டி வாழ்வதைத் தடுக்கும் என்பதைப் பெருஞ்சித்திரனார் மட்டுமில்லை, இந்திய அரசும் அறிந்திருக்கிறது. அதனால் தான், இந்தியெதிர்ப்புப் போராட்டங்கள், சாதியொழிப்பு மாநாடுகள், தமிழ் ஆட்சிமொழி - பயிற்றுமொழி முயற்சிகள், மாநிலங்களுக்கு அதிக உரிமை எனும் கோரிக்கைகள் ஆகியவற்றை யெல்லாம் கண்டு அஞ்சாத இந்திய அரசு, பெருஞ்சித்திரனார் எழுப்பிய தமிழ் நாட்டு விடுதலை முழக்கத்தைக் கேட்டு நடுங்கியது. அதனால்தான் 1985 வாக்கில் அன்றைய இந்தியத் தலைமையமைச்சர் இரசீவ் காந்தி தமது கட்சித் தலைவர் ஒருவரை பெருஞ்சித்திரனாரிடம் அனுப்பி 'நீங்கள் தமிழ்நாட்டு விடுதலைக் கொள்கையை விட்டு விட்டால் உங்களுக்குப் பலவகையில் நன்மைகள் செய்வோம்' என்று சொன்னார். எத்தனை பேர் இந்தி திணிப்பை எதிர்த்துப் பேசியிருக்கிறார்கள்? அவர்கள் யாரிடமாவது இந்தியெதிர்ப்புக் கொள்கையைக் கைவிட்டுவிட்டால் உங்களுக்கு நன்மைகள் செய்வோம் என்று சொன்னதுண்டா? இல்லையே! ஏனென்றால் தமிழ்நாடு இந்தியாவின் ஒரு மாநிலமாக இருக்கும் வரையிலும் இந்தி திணிப்பைத் தடுத்துவிட முடியாது. இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் ஒரு எறும்புக் கடியைப் போல.

இந்திக்காரன் நம்மீது கொண்டுள்ள வல்லாளுமையை அது அசைக்காது. தமிழ்நாட்டு விடுதலைக் கொள்கைதான் இந்திக்காரனின் வல்லாளுமையைப் பூண்டோடு பிடுங்கியெறியும் ஆற்றலுடையது. அக் கொள்கை அவ்வல்லாளுமையின் நெஞ்சாங் குலையிலேயே கைவைக்கிறது.

தமிழைத் தமிழ் நாட்டின் பயிற்று மொழியாகவும், ஆட்சிமொழியாகவும் வைக்க உழைக்கும் தமிழறிஞர்களிடம் சென்று இம் முயற்சியைக் கைவிடுவீர்களானால் உங்களுக்குப் பணம் தருகிறேன் என்று சொல்லியதில்லை எந்த இந்தியத் தலைமை அமைச்சரும். தமிழ்மொழி மாநில அலுவலகங்களனைத்திலும் பயன்படுத்தப் படலாம். ஆனால் அஞ்சல், வைப்பகங்கள், நடுவணரசின் தொழிற்சாலைகள், அணு ஆராய்ச்சித்துறை, விண்வெளி ஆராய்ச்சித் துறை என அங்கெல்லாம் வேலைபார்ப்போர் இந்தியைப் படித்துத்தானாக வேண்டும். அதனால்தான் இன்று தமிழ்ப் பிள்ளைகள் பெருமளவில் இந்தி படிக்கிறார்கள். தமிழ் மாநில ஆட்சி மொழியானாலென்ன, பயிற்று மொழியானாலென்ன? நமது குடுமி இந்திக்காரன் கையிலிருக்கும் வரையிலும் தமிழ்ப் பிள்ளைகள் இந்தி படிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

1968-ல் அண்ணாவின் தி.மு.க. அரசு தமிழ்நாட்டு அரசுக்குக் கட்டுப்பட்ட பள்ளிகளில் இந்தி கற்பிக்கப்படாது என்று சட்டம் போட்டது. அது கண்ட இந்திக்காரன், நடுவண் அரசுக்கு நேரடியாகக் கட்டுப்பட்ட பள்ளிகளைத் தமிழ்நாட்டில் திறக்க வைத்தான் அங்கு எல்லாமே இந்தியும் ஆங்கிலமும்தான். தமிழ்நாட்டுப் பெற்றோர்கள் நான் முந்தி, நீ முந்தி என்று தம் பிள்ளைகளை அப் பள்ளிகளுக்கு அனுப்புகிறார்கள். அவர்களைக் குறை சொல்லத் தேவையில்லை. அப் பள்ளிகளில் படித்தவர்களுக்கு இந்தி நன்றாகத் தெரிவதால் நடுவண் அரசிலும், நடுவண் அரசுக்கு உட்பட்ட பல்வேறு துறைகளிலும் வேலை கிடைக்கப் பிறரைவிட அதிக வாய்ப்பிருக்கிறதன்றோ? இந்திக்காரனின் மேலாளுமை நம்மீது இருக்கும் வரையிலும் இதில் எந்த மாற்றமும் ஏற்படாது. அதனால் தான் இந்திய அரசு தமிழைப் பயிற்றுமொழி மற்றும் ஆட்சிமொழியாக்கும் முயற்சிகளில் ஈடுபடுவாரைப் பணம் கொடுத்து வாயடைக்க முயலவில்லை. ஆனால் தமிழ்நாட்டு விடுதலை கேட்கும் பெருஞ்சித்திரனாரைப் பணம் கொடுத்து வாயடைக்கும் முயற்சியில் இந்தியத் தலைமையமைச்சரே ஈடுபட்டார்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று எத்தனைக் கோரிக்கைகள், தீர்மானங்கள், அறிக்கைகள்! தி.மு.க.வும், அ.இ.அ.தி.மு.க.வும் தேர்தலுக்குத் தேர்தல் ‘மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும்’ என்று தேர்தல் அறிக்கைகள் விடுக்கின்றன.

1967-லிருந்து இவ்விரண்டு கட்சிகளும்தான் மாறி மாறி தமிழ் நாட்டில் ஆட்சிக்கு வந்திருக்கின்றன. இக் கட்சிகளின் தேர்தல் கூட்டாளிகள் நடுவணரசில் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் 1967-ஐ விட இன்று நடுவணரசின் அதிகாரங்கள் பெருகி, தமிழ்நாட்டு மாநில அரசின் அதிகாரங்கள் குறைந்திருக்கின்றன. (எடுத்துக் காட்டாக, 1967-ல் பள்ளிப் படிப்பு பொதுவாக மாநில அரசின் கட்டுப்பாட்டுக் குட்பட்டிருந்தது. என்னென்ன பாடங்கள், எந்தெந்த மொழியில் கற்பிக்கப்படும் என்பதைத் தமிழ்நாட்டு அரசு தீர்மானித்தது. ஆனால் இன்று நடுவணரசுக்குக் கட்டுப்பட்ட பள்ளிகள் தமிழ் நாட்டில் ஏராளம். என்னென்ன பாடங்கள், எந்தெந்த மொழியில் கற்பிக்கப்படும் என்பதை நடுவணரசு தீர்மானிக்கிறது. இப்பள்ளிகளில் தமிழ் கீழ்ப்படுத்தப்படுகிறது. அது குறித்துத் தமிழ்நாட்டு அரசு எதுவும் செய்துவிட முடியாது.) தமிழ்நாடு இந்தியாவின் ஒரு மாநிலமாக இருக்கும் வரையிலும், யாரைத்தான் தமிழ்நாட்டு மக்கள் மாநில ஆட்சிக்குத் தேர்ந்தெடுத்தாலும், இந்திக்காரன் எப்போது வேண்டுமானாலும் கல்வித்துறையானாலும் சரி, காவல் துறையானாலும் சரி, அடவித்துறையானாலும் சரி, வணிகத் துறையானாலும் சரி, எங்கு வேண்டுமானாலும் தன் விருப்பப்படி தலையிட்டுத் தமிழனை அடக்கி வைத்துக் கொள்வான். அதனால்தான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கோரிக்கை விடுபவர்களிடம் இக்கோரிக்கையை விட்டுவிடு, உனக்கு நன்மைகள் செய்கிறேன் என்று செய்தியனுப்பியதில்லை எந்த இந்தியத் தலைமையமைச்சரும். பெருஞ்சித்திரனாரின் தமிழ் நாட்டு விடுதலைக் கோரிக்கையொன்றுதான் இந்திக்காரன் நம் மொழியையும், பண்பாடுகளையும் சீரழிப்பதையும், நம் செல்வங்களைச் சுரண்டிக் கொழுப்பதையும் தடுத்து நிறுத்தும் தகைமை வாய்ந்தது. அதனால்தான் பெருஞ்சித்திரனாரின் தமிழ்நாட்டு விடுதலைக் கொள்கையைக் கண்டு இந்திய அரசு அஞ்சியது. அதனால்தான் பெருஞ்சித்திரனாரைப் பணங்கொடுத்து வாயடைக்க முயன்றார் அன்றைய இந்தியத் தலைமையமைச்சர் இரசீவ் காந்தி.

இந்திக்கார அரசின் பணவலிக்கோ, படைவலிக்கோ தலைசாய்க்காத பாவலரேறு பெருஞ்சித்திரனார் நம்மைப் பிரிந்து போய்விட்டாலும், இந்திக்கார அரசை நடுங்க வைத்த அவரது அரிமா முழக்கம் இன்றும் நம் நெஞ்சத்தே ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

"ஆண்டு நூறானாலும் அன்னைத் தமிழ்நாடு
வேண்டும் விடுதலை எண்ணம் விலகோம் யாம்!
பூண்டோம் உறுதி புறப்பட்டோம் என்றே நீ
மூண்ட இடியாய் முழங்காய் தமிழ்மகனே!"

பாவலரேறு ஐயா அவர்களின் நூல்கள் பற்றிய ஆய்வு...

நம் ஐயா பாவலரேறுவின் படைப்பாக்கங்கள் குறித்தும் ஐயா அவர்களைப் பற்றியும் இதுவரை இருபதுக்கும் மேற்பட்டோர் தங்களின் முதுநிலை ஆய்வை நிகழ்த்தியிருக்கின்றனர்.

அண்மையில் முதுகலைப் பட்டத்திற்காக அளிக்க வேண்டிய ஆய்வறிக்கைக்காக இருவர் ஆய்வு செய்திருக்கின்றனர்.

1) **பாவலரேறு** பெருஞ்சித்திரனாரின் பாவியக்கொத்து - ஓர் ஆய்வு - என்கிற தலைப்பின் கீழ் சென்னைப் பல்கலைக் கழகத்தின் கிறித்துவக் கல்லூரி (தன்னாட்சி)யில் செல்வி. தே. தென்மொழி ஆய்வு செய்திருக்கிறார்.

பாவலர் இளஞ்சித்திரன் - அவர்களின் மகள் தே.தென்மொழி முதுகலைக்(தமிழ்) கல்வியில், இவ்வாய்வின் நெறியாளராக இருந்தவர் முனைவர் கு.அரசேந்திரன் ஆவர்.

மாணவி தென்மொழியின் ஆய்வு, பாவியக் கொத்தில் குடும்பம், பாவியக்கொத்தில் நல்வோர் - அல்லோர், பாவியக்கொத்தில் இந்தி - இந்தியா எதிர்ப்பு, பாவியக்கொத்தில் இலக்கிய நயம் - ஆகிய உட்தலைப்புகளின் கீழ்ச் செய்யப் பெற்றது.

2) **பெருஞ்சித்திரனார்** பாடல்களில் குமுகாய (சமுதாய) உணர்வு - என்கிற தலைப்பின் கீழ்க் கோவை - பாரதியார் பல்கலைக் கழகத்தில் செல்வி து.கனிமொழி ஆய்வு செய்திருக்கிறார்.

தென்மொழி ப.துரையரசன் - அவர்களின் மகள் து.கனிமொழிக்கு முதுகலை (தமிழ்)க் கல்வியில், இவ்வாய்வின் நெறியாளராக இருந்தவர் சிற்பி என்கிற பொ. பாலசுப்பிரமணியம் ஆவார்.

மாணவி கனிமொழியின் ஆய்வு பெருஞ்சித்திரனார் வாழ்வும் பணியும், பெருஞ்சித்திரனார் படைப்புகள், பெருஞ்சித்திரனார் பாடல்களில் தமிழ்மொழி - இன - நாட்டுணர்வு, பெருஞ்சித்திரனார் பாடல்களில் குமுகாய (சமுதாய) உணர்வு - ஆகிய உட்தலைப்புகளின் கீழ்ச் செய்யப்பெற்றது.

- மாணவிகள் இருவரின் முனைப்பையும் முயற்சியையும், தென்மொழி உளமாரப் பாராட்டுகிறது. அவர்களுக்குத் துணைநின்ற அவர்களின் தாய் - தந்தையர்க்கும், நெறியாளர்க்கும் தென்மொழி மகிழ்வைத் தெரிவிக்கிறது.

“கள்” போட வேண்டாம்!

பாவலர் **ப. எழில்வாணன்**

1. தமிழ்மொழியைப் பலவாறாய்க் கூறு போட்டுச்
சந்தையிலே விற்பதற்கு வந்து விட்டார்!
தமிழறிந்த தமிழர்தாம் இதனைச் செய்து
தமிழ்நாட்டில் பெயர்வாங்க முடியும் போலும்!
தமிழரல்லா அறிஞரெல்லாம் தமிழை வாழத்தித்
தகுதிமிக்க மொழியென்றே பெருமை பேசித்
தமிழ்வளத்தைப் புகழ்கின்ற நிலையில் இங்கே
‘தமிழ் மொழிகள்’ என்கின்ற தமிழர் பாரீர்!

2. இசைத்தமிழும் இயற்றமிழும் கூடி நிற்க
ஈர்க்கின்ற நாடகமும் தமிழே ஆகும்!
வசைத்தமிழர் முத்தமிழை அறியா மல்தான்
வானார்ந்த அறிவாலே ‘தமிழ்கள்’ என்றார்!
இசைப்பதற்கும் இசைவளிக்கும் தமிழே நாவில்
இயல்பாக உரைப்பதற்கும் வந்து நிற்கும்!
அசைத்துடலை நடிப்பவர்க்கும் நாவில் தோன்றி
அந்தமிழே முத்தமிழாய் இனிக்கும் இங்கே!

3. இசைபாடி முடித்தபின்னே அந்த வாயால்
இயற்றமிழைப் படித்துவிட்டுப் பலரும் கேட்கத்
திசைதோறும் நாடகமாய்ப் பேசிக் காட்டும்
செந்தமிழர் ஒருவரது வாயை நாமும்
வசையின்றி ஒருமையிலே கூறல் அன்றி
வம்பளக்க ‘அவர் வாய்கள்’ என்றா சொல்வோம்?
பசையில்லாத் தமிழ்நெஞ்சர் படித்த தெல்லாம்
பன்மையென்றால் தாயொருமை இல்லை யாமோ?

4. பெற்றதனால் ஒருவனுக்குப் பெற்ற தாயாம்!
பெருமையுடன் வளர்த்ததனால் வளர்ப்புத் தாயாம்!
உற்றகுனம் அன்பாலே அன்புத் தாயாம்!
உரிமைதரும் பண்பாலே பண்புத் தாயாம்!
கற்றுநிதம் கொடுத்ததனால் அறிவுத் தாயாம்!
காலமெல்லாம் காத்ததனால் காவல் தாயாம்!

பெற்றவளின் பலகுணத்தைப் பேசு கின்ற
பெருமகனும் 'என்தாய்கள்' எனச்சொல் வானோ?

5. அதிகாலை எழுகதிராய் அழகாய்த் தோன்றி
அந்நாளின் நடுப்பகலில் வெம்மை தந்தால்
அதுதானே வெங்கதிராம்! அன்று மாலை
அடிவானில் விழுகதிராய் மறைதல் காண்போம்!
புதிதாகச் செங்கதிராய்ப் பெயரும் சொல்லிப்
புலவரெல்லாம் அழைத்தாலும் கதிரோன் ஒன்றே!
அதியறிவு கொண்டிங்கே பன்மை நோக்கி
அனலிதனைக் 'கதிரவன்கள்' எனச்சொல் வாரோ?

6. முழுமதியாய் எழிலாக நீந்து கின்ற
முறைமாறி நாள்தோறும் தேய்ந்து வந்தால்
அழகிழந்த தேய்பிறையாய் அதனைச் சொல்வோம்!
அவ்வளவும் மறைந்தபின்னே அதனை நாமும்
முழுமைதவழ் இருள்மதியாய்ச் சொல்லி வைப்போம்!
முன்னேற்றம் வளர்பிறையாய்ப் பின்பு காண்போம்!
அழியாத நிலவுக்குப் பலபேர் சொன்னோம்!
ஆனாலும் 'நிலவுகள் பார்' என்றா சொன்னோம்?

7. மென்காற்றாய்த் தென்திசையில் தென்றல் வீசும்!
மேற்கினிலே அதுவந்தால் கோடை ஆகும்!
தென்திசைக்கோ எதிர்த்திசையில் வாடை ஆகும்!
செந்தமிழில் கீழ்க்காற்று கொண்டல் ஆகும்!
பன்வகையாய்க் காற்றுக்குப் பெயர்கள் உண்டு!
பண்பாலே பலவாறாய் ஆய்ந்து சொன்னார்!
நன்மொழியில் அவையெல்லாம் காற்று தானே!
நம்முன்னோர் 'காற்றுகளாய்க்' கூற வில்லை!

8. தமிழ்நாட்டை நான்காகத் திசைகள் நோக்கித்
தாழ்வின்றிப் பெயர்சொல்வோம் அறிந்து கொள்ள!
தமிழ்நாடோ தென்தமிழ நாடு; மேற்குத்
தமிழ்நாடு, வடதமிழ் நாடு, மற்றும்
இமிழ்கடல்சேர் கீழ்தமிழ்நா டென்று சொல்வோம்!
என்றாலும் தமிழ்நாடு நமக்கோ ஒன்றே!
தமிழர்களே 'தமிழ்நாடுகள்' என்று சொன்னால்
தமிழர்க்குள் ஒற்றுமையும் நிலைத்தல் உண்டா?

9. செந்தமிழே ஆனாலும் செழுமை மாறித்
திகழ்கின்ற கொடுந்தமிழே ஆனா லும்நாம்
நந்தமிழைத் தமிழென்றே சொல்லல் வேண்டும்!
நாளைவரும் அறிவியலில் புதுமை தன்னைத்
தந்துநிற்கும் செழுந்தமிழைக் கண்ட போதும்
தருக்கங்கள் தேவையில்லை! தமிழும் ஒன்றே!
சிந்தையினில் தமிழுணர்வும் ஒன்றே! எட்டுத்
திசையெல்லாம் ஆண்டாலும் தமிழ்த்தாய் ஒன்றே!

10. 'கள்' போட்டுத் 'தமிழ்கள், பார்' என்று சொல்லும்
கள்ளாட்டுப் போடுகின்ற சிலபேர் நம்மைப்
புள்ளாட்டம் தாம்நினைத்து வேட்டை யாடப்
புறப்பட்டார்; புலிக்கூட்டம் என்று காட்ட
வெள்ளோட்டம் போல்விட்டோம்! இனிமேல் இந்த
விளையாட்டு வண்டமிழில் செய்தல் வேண்டாம்!
தெள்ளோட்டம் சிறப்படைக சிந்தை யெல்லாம்!
செந்தமிழர் நலம்பெறுக! தமிழே வாழ்க!

அணியமாகிவிட்டது!

பாவலரேறு ஐயாவின் வண்ணப்படத்துடன்

தென்மொழி நாள்காட்டி

தேவைக்கு முந்துங்கள்!

தனிநாள்காட்டி விலை : உரு 15.00

மொத்த விற்பனைக்குக் கழிவு உண்டு

உழவர் திருநாள் வாழ்த்து

- இரணியன்

1. அகர முதல எழுத்தெல்லாம் மேழி
உழவன் முதற்றே உலகு

2. கற்றதனா லாய பயனென்கொல் ஏருழவன்
பொற்றொழில் போற்றார் எனின்

3. புலம்உழு(து) ஊட்டிடும் பொற்பறம் பூண்டார்
நிலமிசை நீடுவாழ் வார்

4. வேண்டுநர் வேண்ட விளைசெய்கா ராளர்க்(கு)
யாண்டும் இடும்பை தரேல்

5. இருள்சேர் இழிநிலைகள் சேரா உழவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் நாட்டு.

6. மக்களுக்(கு) ஊண்விளைக்கும் ஏராளர்ப் போற்வார்
எக்காலும் வாழ்வார் இனிது.

7. தனக்குவமை இல்லாத் தொழிலார் கவலின்
நிலக்கவலை நீங்கல் அரிது.

8. கரவிலான் காராளன் ஏர்சோர்ந்தால் எம்மாப்
பெருவினையும் பேணல் அரிது

9. கோளிற் பொறியிற் குணமிலவே மண்விளைப்பான்
ஏரை மதியா இறை

10. பழிதீர் நலவாழ்வு பேணுவர் பேணார்
உழவோன் நலம்ஓரா தார்.

விளக்கம் :

1. எழுத்தெல்லாம் அகரத்தை முதலாகக் கொண்டவை. உலகம், மேழியால் உயிர்கட்கு உணவூட்டும் உழவனையே முதலாகக் கொண்டது.

2. ஏருழவனின் உழுதொழிலே பொற்புடையது. அதனைப் போற்றார் எனின், அவர் கற்றதனால் பயனொன்றுமில்லை. (அறிவாளர்க்கு)

3. புலத்தை (நிலத்தை) உழுது, பயிர்செய்து உயிர்களுக்கு உணவூட்டும் பயிர்த்தொழிலே பொற்புடைய அறமாகும். அவ்வறச் செயலை மேற்கொண்டார் நில உலகில் நீடு வாழ்வார் (நீடு வாழ வேண்டும்).

4. வேண்டியார்க்கு வேண்டியதை விளைப்பான் காராளன். காராளர்க்கு யாரும் எங்கும் எத்துன்பமும் தர வேண்டா. (ஆள்வோர்க்கு)

5. உழவனின் பொருள்செறிந்த புகழை உணர்ந்து, தக்கன புரிந்தார்தம் நாட்டில் இருள்சேர்க்கும் இழிநிலைகள் சேருவதில்லை. (ஆள்வோர்க்கு)

6. மக்களுக்கு அடிப்படைத் தேவையான உணவுப்பொருளை விளைவித்துத் தரும் அறவாழ்வை மேற்கொண்டுள்ள உழவர்களைப் போற்றிச் சிறப்புச் செய்வோர் எக் காலத்திலும் இனிது வாழ்வர். (அனைவருக்கும்)

7. தனக்கு உவமையில்லாதது வேளாண்மையே. அத் தொழில் புரிவார் கவலையுறின், உலகம் கவலையுறும் அவலம் வந்தடையும். பின், அந்நிலை நீங்கல் கடினமாகும். (ஆள்வோர்க்கு)

8. காராண்மை செய்வான் கரவில்லா நெஞ்சினன். அவன் ஏர் சோர்தல் கூடாது. ஏர் சோர்ந்தால், நாட்டில் எம்மாப் பெருவினையையும் தொடர்ந்து பேணுதல் கடினமாகும். (ஆள்வோர்க்கு)

9. மண்ணை உழுது ஊணை விளைவிப்பவனின் ஏர்வினையை அரசு (இறை) மதித்துப் பேண வேண்டும். அவ்வாறு மதித்துப் பேணா அரசு கோளில்லாப் பொறிபோற் குணமில்லாததாகும். (ஆள்வோர்க்கு)

10. உழவோன் நலம் ஓர்பவரே பழிதீர் நல வாழ்வு பேணுவர். உழவோன் நலம் ஓரார் பழிதீர் நல வாழ்வு பேணார். (ஆள்வோர்க்கு)

பாவலரேறு ஐயா அவர்களின்
திருக்குறள் மெய்ப்பொருளுரை

நம் அரும் பெறல் ஐயா பாவலரேறு அவர்கள் தம் வாழ்நாள் பின்பகுதியின் பெருமுயற்சியாய் எடுத்துக் கொண்டு எழுதிய திருக்குறள் - மெய்ப்பொருளுரை - (ஐயா அவர்கள் எழுதி முடித்துள்ள வரையில்) வரும் 10-3-97 அன்று வெளியிடப் பெறுகிற வகையில் அணியமாகிக் கொண்டிருக்கிறது.

ஆயிரம் பக்கங்களுக்கும் மேலான அந்நூல் வெளியீட்டின் பெருமுயற்சிக்கு அன்பர்களின் துணையே பெரிதும் எண்ணப் பெறுகிறது.

- ஆசிரியர், 'தென்மொழி'

மக்களவை

நம் தமிழ்

தென்மொழி ஆசிரியர் ஐயா அவர்களுக்கு,

வணக்கம்.

கடந்த ‘மக்களவை’ப் பகுதியில் அறிஞர் அ.மார்க்சு அவர்கள், அதற்கு முன்பு எழுதப் பெற்றிருந்த செய்திகளுக்கு விடையாக மடல் ஒன்றை எழுதியிருந்தார். அது குறித்தே இதை எழுத வேண்டி வந்தது.

முதலில் அ.மார்க்சு அவர்கள் இது தொடர்பாகச் சொல்வது குறித்துப் பார்ப்போம்.

1. தமிழ் மொழியை - மொழி - எனப் பொதுப்படத் தொகுத்துக் கூறிட முடியாது. எதையுமே அப்படி பொதுப் பட ஒருமைப்படுத்திக் கூறுவது சரியன்று.

2. எல்லாப் பொதுமைப்பாடான ஒருமைப்படுத்தமும் ஆளுமை கொண்டவையாக இருக்கும்.

3. எல்லாமும் பன்மைப்பட்டதாக இருக்கிறபோது அந்தப் பன்மைப்பாடுகளில் உள்ள ஒடுக்குமுறைகளை - அந்தத் தளத்தில் இருந்து எதிர்த்திடல் வேண்டும்.

4. தமிழ்மொழியும் பன்மைப்பட்டதாக இருக்கிறது. அது ‘செந்தமிழ்’ ‘கொடுந்தமிழ்’ என ஒடுக்கும், ஒடுக்கப்படுகிற சாதிகளின் தன்மையில் பிரிந்து இருப்பதோடு, முத்தமிழ்களாகவேறு சொல்லப்பட்டது. இயல் - இசை - நாடகத் தமிழ் எனப் பிரிந்த தமிழ் முத்தமிழாகுமே யல்லாமல் அம் மூன்றையும் தமிழ் - என ஒருமைப்படுத்திக் கூறிட இயலாது.

- என்று பல்வேறு செய்திகளை அ.மார்க்சு முன்வைத்திருக்கிறார்.

இது, அவர் இன்றைக்கு ஏற்றிருக்கிற அரசியலைத் தழுவியே அமைந்திருக்கிறது.

எனவே அவ் வரசியல் இணைப்போடேயே நாமும் அவர் கருத்துகளைப் பார்ப்பது சரியானதாயிருக்கும்.

முதலில் --

1. "மொழி, வழிபடுமுறை, உணவு, உடை, இலக்கிய மரபு - ஆகிய கூறுகள் ஒரு கு(ச)முகம் முழுமைக்கும், ஒரு படித்தானதாக இல்லை. இவை புவியி(நிலவி)யல் அடிப்படையிலும், சாதி, மத, இன வழியிலும் குழுக்குள் குழு வேறுபடுகின்றன. இவற்றில் ஏதேனும் ஒன்று தேர்வு செய்யப்பட்டு அது இந்த மக்கட் குமுகம் முழுமைக்குமான பண்பாடாக வரையறுக்கப்படுகிறது."

-- என்று அ.மார்க்சு குறிப்பிடுகிறார். அ.மார்க்சு குறிப்பிடுவதுபோல் குழுவுக்குள் குழு - வேறுபாடுடைய கூறுகளில் ஏதேனும் ஒன்று தேர்வு செய்யப்பட்டு அ'து இந்த மக்கட் குமுகம் முழுமைக்குமான பண்பாடாக மட்டும் வரையறுக்கப்படவில்லை.

புறநிலையில் உள்ள அரசியல், ஆளுமைப் பண்பாடுகளும் கூட ஒரு குமுகத்தின் மீது ஆளுமை செய்கின்றன.

இன்றைய நம் தமிழ்க் குமுகம் பெரிதும் புற அரசியல் - பண்பியல் தாக்கங்களாலேயே ஆளுமைக்குட்பட்டிருக்கிறது. ஆளும் ஆரியப் பார்ப்பனியப் பண்பாடும் - சுரண்டும் வல்லரசியப் பண்பாடும் - அரசியலுமே தமிழ்க் குமுகத்தைப் பெரிதும் சீரழிக்கின்றன.

2. இருப்பினும் அ.மார்க்சு குறிப்பிடுகிறபடி ஒரு குமுகம் முழுமைக்கும் பல கூறுகளும் ஒரு படித்தானவாக இருந்திடமுடியாது. அவற்றில் குழுக்களுக்குள் குழு வேறுபட்டிருக்கிற வேறுபாடுகளுள் ஒன்றின் ஆளுமைவழி - குமுகம் முழுமைக்குமான பண்பாடாக அது வரையறுக்கப்படவே செய்கிறது - என்பதும் பொதுப்பட காணுகையில் உண்மைதான். அது இயங்கியலின் உண்மையே. அதையாரும் மறுத்துவிடவும் இல்லை.

எனவே, அது எல்லா நிலைகளுக்கும் பொதுவானதே. மாநதர் ஒவ்வொருவருக்கும் இடையிலும் அப்படியாகத்தான் இருந்திடல் இயலும். இது ஒருவர் மற்றவர்க்கு இடையில் என்று மட்டுமில்லாமல் - ஒருவருக்குள்ளாகவே அப்படியான பல கூறுகள் உண்டு.

ஒருவர்க்குள்ளாகவே உள்ள இத்தகைய பல கூறுகளையும் - அவரவர் கொண்ட, மேற்கொண்ட குமுக - அரசியல் - வாழ்வியல் வழிப்பட்ட பார்வையிலிருந்து ஆய்ந்து ஒன்றை மேற்கொண்டு மற்றதின் தவற்றை சரியின்மையை விலக்கி விடுகின்றனர். அத் தவற்றை அரசியல்வழி விளக்கிக் கருத்துப் பரப்புகின்றனர்.

சான்றாக - 'மக்கள் கல்வி இயக்கம்' - என்னும் அமைப்பின் பொறுப்பினர்கள் அ.மார்க்சு கல்யாணி, தருமலிங்கம், கோச்சடை, இரவிக்குமார் போன்றோர் அனைவரும் ஒரே நிலவியல்

அடிப்படையிலும், சாதி, மத, இன வழிப்பட்ட குழுக்களுக்குள்ளிருந்தும் இணைந்தவர்கள் அல்லர். அவரவர்களின் பின்னணிகள் - மிகப் பெரும் வேறுபாடு கொண்டனவே. அவரவர்கள் கொண்ட இப் பின்னணிகளைத் தூக்கி எறிந்து ஓர் அரசியல் நிலைக்கு அவர்களைக் கொண்டு நிறுத்தியது - ‘மக்கள் விடுதலைக்கான கல்வி’ என்கிற ஒருமையே.

ஆக, அந்த ஒருமை இக் குமுகத்தினுள் இருந்த ஏதோ ஒரு குழுவிற்கான பண்பாட்டை மட்டும் கொண்டதன்று. அ்து இக் குழுக்களுக்குள் இருக்கிற ஆளுமை உணர்வுகளை அறுத்தெறிந்து உழைக்கும் பெரும்பான்மை மக்களின் விடுதலைக்கான கல்வியை நிறுவுவதற்கான அரசியலை முன் வைப்பதாகவே இருக்கிறது.

ஒருமை அரசியலை அ.மார்க்சு ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் இத்தகைய நடைமுறை ‘ஒருமை’த் தன்மை கொண்டதாகவே இருப்பதை அ.மார்க்சு மறுத்துவிட முடியாது.

3. ஆளுமையர்களின் ‘ஒருமைப்பாட்டு’ - அரசியல் மீதான வெறுப்புணர்ச்சியும், அதை எதிர்ப்பதாகக் கச்சை கட்டிய போலிப் பொதுவுடைமையரின் பார்ப்பனிய மேலாளுமையை எதிர்க்காத பாட்டாளிய வகுப்பின் ஒருமைப்பாட்டுணர்ச்சி(!)-யின் மீதான சினமும் அ.மார்க்சு அவர்களை உணர்வு வயப்பட வைப்பது நயன்மையுடையதே.

ஆனாலும் - அவர் அதற்கென்ன மாற்று என்கிறபடி தெளியாமல் மீண்டும் பார்ப்பனிய வலைப் பின்னலிலேயே விழுந்து விடுகிறார். எனவே அவர் தமக்குள் நிறைய முரண்பட்டுப் போகிறார்.

சான்றாக ..

(அ) தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், பெண்கள் முதலிய அடித்தட்டினர் உரிமைகளுக்காகப் போராடுவது - என்று அவர் ஏற்றுக் கொள்ளுகிற, பரப்புகிற அரசியல் - சூழலுக்குச் சூழல் மாறுபாடுடையதாகவும், இடத்திற்கு இடம் நெளிந்து போவதாகவுமே இருக்கிறது.

(1) முதலில் - தாழ்த்தப்பட்டோர் - பிற்படுத்தப்பட்டோர் - பெண்கள் - என்கிற அடித்தட்டினருக்கான வரலாற்றாய்வு ஒன்றை நடத்தப் போவதாக அறிவிக்கிற அ.மார்க்சு - அதை **‘சபால்டர்ன் ஸ்டடீஸ்’** - என்று தமிழகத்தின் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட பெண் - மக்களின் வழங்கு மொழிக்குப் புரியாத மொழியிலேயே அறிமுகப்படுத்துகிறார்.

(2) அதற்கான அழைப்பை மேற்சொன்னபடி ‘தாழ்த்தப்பட்டோர்

- பிற்படுத்தப்பட்டோர் - பெண்கள்' - என்பதாக அழைப்பில் அச்சிட்டும் - அதையே தினமணிக்கதிரில் செய்தியாக்குகிறபோது 'கறுப்பியம், பெண்ணியம், தாழ்த்தப்பட்டோரியம் (தலித்தியம் - அ.மார்க்சு சொல்லில்) - என்பதாகவும் மாற்றி விடுகிறார்.

(3) ஒருமை உணர்வு - என்று இந்துப் பார்ப்பனியத்திற்கான 'இந்தியா'வை மறுப்பதாகக் கூறும் அ.மார்க்சு - அந்த அழைப்பு அறிக்கையில் '**இந்தியத் துணைக் கண்டத்தைச் சேர்ந்த** அறிஞர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு உலக அளவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது" - என்றும், '**சபால்டர்ன் ஸ்டடீஸ்**' - என்கிற அடித்தட்டு நோக்கிலான ஆய்வுமுறை ஒன்றை **இந்திய** வரலாற்று அறிஞர்கள் உருவாக்கி உலக அளவில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர்' - என்று தினமணிக் கதிரிலும் எழுதி - '**இந்தியா**'வை உச்சி மோந்து பாராட்டிப் பெருமை கொள்ளுகிறார். அவர் சொல்லுகிற அரசியல்படி, பன்முகத் தன்மைப்படி அத்தகைய அரசியல் எந்தக் குழுகக் குழுவைச் சார்ந்தவரிடமிருந்து வந்தது - என்று கூறியன்றோ - அதற்குப் பெருமை சேர்க்க வேண்டும். மாறாக அக் குமுகக் குழுவைப் பார்ப்பனிய இந்தியாவுக்குள்ளும் அல்லது இந்தியத் துணைக் கண்டத்துக்குள்ளும் - என்பதாகத் திணிக்கிற பார்ப்பனிய இந்திய ஒருமைப்பாட்டு முயற்சி எதற்கு?

(5) 'தென்மொழி'க்கு - எழுதுகிற அ.மார்க்சு '**நயன்மை**', '**சினம்**' என்று தூய தமிழிலும், **அ.மார்க்சு** என்று தமிழ் வரிவடிவிலும் எழுதுகிறபோது, பார்ப்பன ஞானிகளுக்காகவும் பிற பார்ப்பன நாகார்ச்சுனன்களுக்காகவும் '**பிரக்ஞை**', '**ரீதி**', '**ஆதர்ச**', `**Non-Linear**', '**எதார்த்தவாதம்**', '**அராஜகம்**', '**ஜீவித்தல்**' என்றும், **அ.மார்க்ஸ்** என்றும் பூணூல் இல்லாத தன் உடம்பில் ஏன் பூணூல் போட்டுக்கொள்ள வேண்டும்?

(6) '**தமிழ்**' - என்கிற ஒருமையை - '**தமிழர்**' - என்கிற ஒருமையைத் தவறு என்றும் அதுவே ஒரு ஆளுமையின் வடிவம் என்பதாகவும் கூறும் அ.மார்க்சு, தாம் முன்பு நடத்திய 'புலம் பெயர்ந்த தமிழர் நல மாநாட்டில்...

"உலகத் தமிழ் மாநாடு கொண்டாடப்பட இருக்கும் இன்றைய சூழலில் உலகெங்கிலும் தமிழ் அகதிகள் படும் துன்பத்தின் மீது **தமிழர்களின்** கவனத்தை ஈர்ப்பது மனித உரிமைகள் மற்றும் **தமிழர்** நலனில் அக்கறையுள்ள நம் ஒவ்வொருவரின் கடமையாகிறது"

- என்பதின்வழி யாரைத் 'தமிழர்' - எனக் குறிப்பிட்டார்.

- அன்றைக்கு - அந்தப் போராட்டத்திற்கு ஒருவேளை 'தமிழன்' தேவைப்பட்டானா என்ன?!

இங்குத் 'தமிழர்' - என்கிற ஒருமைப்பாட்டுணர்ச்சி அ.மார்க்சின் எந்த அரசியலில் சரியானது.

(இதற்காகக் கடினப்பட்டு யாரும் வெளிநாட்டினர் 'இப்படிச் சொல்லி இருக்கிறார்கள்' என்று சான்றுகளை அறிஞர்(!)களிடம் தேடுவதைவிட - மக்கள் குமுக நடைமுறையில் அவர் தேடுவது நல்லது)

- இப்படியாகப் பல வகையில் அவரின் நடைமுறை முரண்பட்டும் - நெளிவுசுளிவோடும் மாறிப் போய்விடுகிறது.

இத்தகைய அவரின் போக்குக்கு இடையில் - நாம் இன்னொன்றையும் புரிந்துகொள்ளல் வேண்டும்.

தமிழ்க் குமுகம் - பல தன்மைகளில் ஆளுமைப்பட்டிருப்பது உண்மையே. அப் பல்வகைத் தன்மைகளும் - அனைவர்க்கும் ஒன்று போலில்லைதாம். அவை பல்வேறு மாறுபாடுகளைக் கொண்டு - பலரிடமும் ஒவ்வொரு தன்மையில் மிகுந்தும் - குறைந்தும், இருந்தும் - இல்லாமலும் இருக்கவே செய்கின்றன.

ஆக - எத்தகைய தன்மைகளிலிருந்தான விடுதலை என்பது - ஒடுக்குமுறையின் அனைத்து வடிவமாய்க் குவிந்திருந்திருக்கிற 'ஒடுக்கு முறைகளின் கூறுகளின்' விடுதலையைத் தொகுத்த - அளாவிய பார்வையாலேயே - செயல்பாட்டிலேயே - அதற்கான இயக்க நடைமுறையிலேயேதான் இருக்க முடியும்.

மாறாக - அவ் வொடுக்குமுறைகளின் கூறுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொன்றுக்குத் தொடர்பில்லாமல் அத் தொடர்புகள் வழி ஒருமைப்படாமல் பிய்த்துக் கொண்டு செயலாற்றிட இயலாது.

சான்றாக...

மக்கள் கல்வி இயக்கம் - என்பதும் தாழ்த்தப்பட்டோர் (தலித்) அரசியல் என்பதும், பெண் விடுதலை என்பதும் - தனித்தனியே அவ்வவ்வற்றின் ஒடுக்குமுறைக் கூறுகளை மட்டும் கொண்டவையல்ல. அப்படியாக அ.மார்க்சும் எண்ண இயலாது - என்றே கருதுகிறோம்.

'மக்கள் கல்வி இயக்கம்' - என்பது கல்வியில் உள்ள ஒடுக்குமுறையை மட்டும் கொண்டதன்று. சாதிக் கொடுமையை நயன்மைப்படுத்தியும், பெண்ணடிமைத்தனத்தை நயன்மைப் படுத்தியும், சுரண்டலை நயன்மைப் படுத்தியும் இருக்கிற செய்திகள்

உறுதியாக மக்கள் கல்வியில் இடம் பெற இயலாது.

அதேபோன்று - தாழ்த்தப்பட்டோர் (விடுதலை) அரசியல் என்பது - ஆளுமை சமற்கிருத - இந்தி - ஆங்கில மொழித்திணிப்பு ஏற்கப்பட்டோ, பொருளியல் சுரண்டல் ஏற்கப்பட்டோ, பெண்ணடிமைத்தனம் ஏற்கப்பட்டோ - அமைந்துவிடமுடியாது.

இங்கு மக்கள் விடுதலையை நோக்கமாகக் கொண்ட ஒவ்வொரு கூறும் அந்த அந்தக் கூறு என்கிற மட்ட அளவிலேயே விடுதலையை நோக்கி நகரமுடியாது.

அந்தக் கூறு - அது சார்ந்த குமுக - அரசியல் - பொருளியல - தொடர்புடைய அனைத்துக் கூறுகளின் ஒடுக்குமுறைகளையும் எதிர்த்ததாகவே இருந்திடல் முடியும் - வேண்டும்.

அப்படியல்லாத விடுதலைக் கருத்து - ஒன்றின் பகுதிக் கூறை மட்டும் பேச எண்ணுவதும், மற்ற ஒடுக்குமுறைக் கூறுகளை அதற்குத் தொடர்பில்லாதவை என மறுப்பதும் - ஒரு பார்ப்பனிய உணர்வினவே.

ஆக - இங்கு எப்படிச் - சாதி ஒழிப்பு அரசியல், பெண் விடுதலை அரசியல், சுரண்டல் ஒழிப்பு அரசியல் இவற்றையெல்லாம் உள்ளடக்கியதான ஒருமையில் 'மக்கள் கல்வி' - அரசியல் இருக்க வேண்டுமோ - அதே போன்றுதான் பிற அனைத்துக் கூறுகளின் மீதான ஆளுமையையும் எதிர்த்ததான ஒருமையில் ஒவ்வொரு கூறும் இருக்க முடியும் - வேண்டும்.

எனவே, பன்முகப்பட்ட அரசியல் கூறுகளையும் ஒருமுகப்படுத்தி - இணைத்துப் புரியாத, ஏற்காத ஒரு தனித்த அரசியல் மக்கள் விடுதலைக்கான கூறாக இருந்திட இயலாது.

அந்தத் தனித்த அரசியல் கூறு தன்னளவில் பல தன்மைகளைக் கொண்டிருப்பினும் - அதில் - பெரும்பான்மை மக்களின் நலனுக்கான - உழைக்கும் மக்களின் நலனுக்கான - ஒடுக்குமுறைக் குள்ளான மக்களின் நலனுக்கான கூறு எதுவோ அதையே முன்னெடுக்கும்.

அவ்வாறு தன்னளவில் அது முன்னெடுக்கிற போது - அது எதை முன்னிறுத்தி விடுதலை நோக்கிச் செல்கிறதோ - அதோடு மற்ற ஒடுக்குமுறைகளையும் உள்ளடக்கியே, ஒருமைப்படுத்தியே வெளிப்படுத்திக்காட்டும்.

சான்றாக அ.மார்க்சே - ஏற்றுக் கொண்ட 'மக்கள் கல்வி இயக்கம்' - என்பது மக்கள் கல்விகள் இயக்கம் - என்றோ, மக்கள்

கல்விகள் இயக்கங்கள் - என்றோ பன்மைக்கூறுகள் உள்ளடங்கியிருப்பதாகக் குறிப்பிடப்படவில்லை.

தாழ்த்தப்பட்டோர் (தலித்) அரசியல் - என்பது - தாழ்த்தப்பட்டோர்கள் (தலித்துகள்) அரசியல் - என்பதாகக் குறிப்பிடப்படுவதில்லை. (தாழ்த்தப்பட்டோருக்குள் பறையர், பள்ளர், சக்கிலியர் - இன்னும் பன்முகப்பட்ட குழுக்கள் - பல தன்மைகளில் இருப்பினும் - அவர்களை அல்லது அவர்கள் மீதான ஒடுக்குமுறையை இணைத்து 'தலித்துகள் அரசியல்' - என்று அ.மார்க்சு குறிப்பிடாததைக் கவனிக்க வேண்டும்.

பெண்ணியத்தை - பெண்ணியங்கள் - என்று அவர் குறிப்பிடுவதில்லை.

அது போலவே, பன்முகப்பட்ட பயன்பாட்டுக் கூறுகளோடு - 'தமிழ்' மொழி நடைமுறையில் இருப்பினும் - அத் தமிழ் சார்ந்த மக்களின் விடுதலையையும், தமிழ் மொழியின் விடுதலையையும் அரசியலாகக் கொள்ளுகிற நாம் 'தமிழ்கள்' - என்று பன்முகப்படுத்திக் காட்டுவது சரியில்லாதது மட்டுமன்று ஆளுமையர்க்கே நலனானது ஆகும்.

மேலும் - 'தமிழ்கள்' - என்று பன்மைப்படுத்திச் சொல்லுகிற அளவில் தமிழ் - தமிழக அளவில் உள்ள பல குழு மக்களால் பல தன்மையில் - அவர்களின் பண்பாட்டு அடிப்படையில் வேறுபட்டுப் பயிலப்பட்டாலும் - அவற்றுள் சில ஆளுமை உணர்ச்சியில் பரப்பப்பட்டாலும் அவற்றை எதிர்த்து - ஒழித்து - நாம் நிலைநிறுத்த வேண்டுவது - அடிப்படை உழைக்கும் பெரும்பான்மை தமிழ் மக்களின் தமிழையே.

அது தம் மீதான எத்தகைய பண்பாட்டு, அரசியல், பொருளியல் ஆளுமைக்கும் உட்படாததான நம் உழைக்கும் மக்களின் தமிழாக, நம் தமிழாக மட்டுமே இருக்க முடியுமே அல்லாமல் தமிழ்களாக இருக்க முடியாது.

எனவே, அத்தகைய ஆளுமைக்குட்பட்ட நம் தமிழ்க் குமுகச் சிதைவுகளையும், மொழிச் சிதைவுகளையும் நாம் ஏற்க முடியாது.

'உட்சிதைவுற்ற உன் இனத்தினை ஒன்றுசேர்!
உருட்டு விழிகளை! உன் பகை தூள் தூள்!'

- என்ற பாவலரேறு அவர்களின் கூற்றுபடி நம்மீதான ஆளுமைகளை நாம் எதிர்ப்பதும் - நம் 'தமிழை' மீட்பதும் நம் கடமையாதல் வேண்டும்.

- தமிழநம்பி

முதல்வர் கலைஞர்க்கு ஒரு வேண்டுகோள் மடல்

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கட்கு, வணக்கம்,

தாங்கள் முதல்வராகப் பணியேற்றுச் சிறப்புறத் தமிழ்நாட்டுக்குத் தொண்டாற்றும் இவ்வினிய வேளையில், மொழித் தொண்டையும், இனத்தொண்டையும் பற்றிய செய்தியொன்றைத் தங்கள் கவனத்திற்குக் கொணர விரும்புகிறேன்.

மொழி நிலையில் இந்தியின் புகுத்தம் மேன்மேலும் விரைவு படுத்தப்பட்டு வருகிறது (ஆங்கிலத் தாக்கம் தனி) எடுத்துக்காட்டாக நடுவணரசுத் துறைகளில் இந்தித் திணிப்பு, மிகுதியும் உள்ளது அதுவும் தங்கள் கட்சியும் நடுவண் அரசிற் பொறுப்பேற்றிருக்கும் இவ்வேளையில், கிழமை விழாவாக (இதற்கு முந்தைய அரசுகளில்) இருந்த `Hindi Week', தற்போது இருகிழமை விழாவாக `Hindi Fortnight' என நடைபெற்றுள்ளது. சான்றுக்கு ஒரு துறையின் மடல் இணைத்துள்ளேன், காணுங்கள்.

This Year, the Dot has instructed that we organise Hindi Fortnight instead of Hindi Week. In Southern Telecom Region, we have decided to have a Hindi Fortnight from 01.09.1996 to 15.09.1996. During the course of discussions of the Parliamentary Committee on Official Language with the Secretary and other Senior Officers of DOT, it was suggested that during this period of Hindi Fortnight, all employee / Officers should be motivated to do their maximum official work in Hindi, We are making all our efforts to implement the Official Language Policy of the Govt. in STR. However, these efforts can achieve results only with the co-operation of the staff and Officers. Hence, I would request you that you take a personal interest in this matter and motivate the Officers and staff under your control who have working knowledge in Hindi to do their best to support the efforts of the Official Language Section in this respect.

Therefore, I would like you to see that as much official work is done in Hindi as possible and also during this fort-

night conversation with each other in the office is also done in Hindi also. Officers also should sigh letters in Hindi to give a fillip to the use of Hindi in day-to-day official work.

ஐயா, தற்போது தமிழுக்கு, தமிழ் மக்களுக்கு, தமிழ் நாட்டிற்க்கு அமைந்துள்ள காலம்போல் (தாங்கள் மாநிலத்திலும், நடுவிலும் ஆட்சிப் பொறுப்பில் இருப்பதுபோல்) அமையுமா! இதைத் தாங்கள் முழுக்க, முழுக்க நம்மின, மொழி முன்னேற்றத்திற்கு, பிறமொழி திணிப்பு அழிப்பிற்கு அரசியல் சட்டத்தின் மூலம் விரைந்து வழி காணாவிட்டால், தமிங்கிலமாக (தமிழ் + ஆங்கிலம்) மாறிவரும் தமிழன் விரைவில் தமிங்கிலவிந்தியனாகத் திரிந்து (தமிழ் + ஆங்கிலம் + இந்தி) கலப்பினமாக மாறித் திசைமாறிப்போய் விடுவான். சற்றே எண்ணிச் செயலாற்றுங்கள்.

ஐயா,

எய்தற்கு அரியது இயைந்தக்கால், அந்நிலையே
செய்தற்கு அரிய செயல்! குறள் : 489

அன்புடன்
குன்னத்தூர்தம்பி

பாவலரேறு பெருஞ்சித்திரனார் நினைவு மலர்



- தமிழறிஞர்கள், இனநல வுணர்வாளர்கள், நாட்டு விடுதலைப் போராளிகள் முதலான பலதுறைப் பெருமக்களிடமும் இருக்க வேண்டிய நலமிகு கருத்துக் களஞ்சியம்!
- இளைய தலைமுறையினர் ஒவ்வொருவரும் கட்டாயங் கைக்கொள்ள வேண்டிய அரும்பொருட் பெட்டகம்!

விலை உரு. 60.
பதிவஞ்சலில் பெற உரு. 75

'தென்மொழி நூல் வெளியீட்டு - விற்பனையகம்',
சென்னை - 600 005.

செய்திகள்

(பாவலரேறு ஐயா அவர்கள் உடல் நலங் குன்றி மருத்துவ மனையில் இருந்த நிலையில் ஐயா அவர்கள் முன்னர்ப் பங்கேற்ற நிகழ்ச்சிகள் தொடர்பான செய்திகள் பல தென்மொழியில் வெளிவராமல் இருந்தன. கையெழுத்துப் படிகள் கோப்பில் ஐயா அவர்கள் எழுதிவைத்திருந்தனவும் விடுபட்டனவுமான அச் செய்திகள் ஈண்டு இடம்பெறுகின்றன. - ஆசிரியர்.)

1. ஈரோடு - பு.இ.மு. மாநாடு !

கடந்த தி.பி 2025 நளித்திங்கள் 24-ஆம் நாள் (10-12-94) அன்று ஈரோடு தமயந்தி பாபு சேட் திருமண மண்டபத்தில் காலை 10.30க்கு, ‘கொதித்தெழுங்கள் தமிழர்களே, தகர்த்தெறிவோம் தடாவை’ எனுந் தலைப்பில் மாநாடு தொடங்கியது. நிகழ்ச்சியில், தோழர். க.இரா. யாழினி (பு.இ.மு.) தலைமைத் தாங்க, தோழர்.கிட்டு, வரவேற்புரையாற்றினார். மற்றும், திருவாளர்கள் தெ.இரா. இராவணன், குறிஞ்சி, இரா.ம. பழனிச்சாமி, வள்ளுவராசன், மயிலாடுதுறை வழக்கறிஞர் தி. இராமதாசு, வழக்கறிஞர் பொ.வே. பக்தவத்சலம், புலவர். தமிழ்மாறன் ஆகியோர் உரையாற்றினார்கள். ‘தடா’ சிறை மீண்டோருக்குப் பாராட்டு எனும் நிகழ்ச்சியில் திரு. பொ.வே. இராமனுசம் அவர்கள், தி.க.பொதுச்செயலர் கு.இராமக்கிருட்டிணன் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினார். மாலை 4.30க்கு ‘இருப்பாய் தமிழா நெருப்பாய்’ எனும் பாவரங்கம் நடந்தது. மற்றும் ‘எங்கும் வேண்டும்; எதிலும் வேண்டும்; இன்பத் தமிழே ஆளவேண்டும்’ எனும் தலைப்பில் நிகழ்ச்சி தொடங்கியது. நிகழ்வின் போது தோழர். சுப்பு (பு.இ.மு) தலைமை தாங்கினார். உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தமிழறிஞர் நம் பாவலரேறு ஐயா அவர்கள் நிகழ்ச்சியில் நீண்ட நெடிய உரையாற்றினார்கள். திருவாளர்கள் கோ.கேசவன், இனியன், அறுவை மருத்துவர். பழ. பாலகிருட்டிணன் ஆகியோரும் உரையாற்றினார்கள். திரு. கி.வே. பொன்னையன், (பு.இ.மு) நிறைவுரையாற்ற, திரு. ச.பளி (பு.இ.மு.) நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

2. கோவை - பு.இ.மு. மாநாடு

தி.பி. 2025 நளி 25 ஞாயிற்றுக் கிழமை அன்று (11-12-94) வடகோவை. சின்னதுரை திருமண மண்டபத்தில் ‘இன்பத் தமிழே ஆள வேண்டும்’ எனுந் தலைப்பில் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்குத் திரு. தமிழ்மணி தலைமை தாங்கினார். உலகத் தமிழின முன்னேற்றக் கழக நிறுவனர் தமிழறிஞர் நம் பாவலரேறு ஐயா

அவர்கள் உரையாற்றினார்கள். திருவாளர்கள். புலவர். ஆதி (த.இ.பே) கோவை ஞானி ('நிகழ்' ஆசிரியர்) ஆகியோர் உரையாற்றினார்கள். திரு. கி.வே. பொன்னையன் நிறைவுரையுடன் நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

3. எழில் - குமரன் வாழ்க !

கடந்த தி.பி. 2025 நளித் திங்கள் 26-ஆம் நாள் திங்கட் கிழமை (12-12-94) அன்று புதுவை - கம்பன் நகர் மணிஅரசி திருமண மண்டபத்தில் விழுப்புரம் தமிழநம்பி என்னும் அ.தெ. இரகோத்தமன் - மலர்க்கொடி - இணையரின் அன்பு மகள் திருநிறைசெல்வி. எழில். வணி.இ.க்கும், பெ. காசிவேலு - இராதா - இணையரின் அருமை மகன் திருநிறை செல்வன் குமரன். பொறி.இ.க்கும், உ.த.மு.க. நிறுவனர் தனித்தமிழ் அறிஞர் நம் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயா அவர்களின் தலைமையிலும், தமிழ்த் திரு. விழுப்பரையன், நக்கீரன் ஆகியோர் முன்னிலையிலும் தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழக தூய தமிழ் அகராதிகள் துறைத் தலைவர். சொல்லாய்வுப் பேரறிஞர். ப.அருளியார் அவர்களால் தமிழ்த் திருமணம் மிகச் சிறப்பாக நடத்தி வைக்கப்பெற்றது.

4. திருப்பத்தூர் - பு.இ.மு. மாநாடு !

தி.பி. 2025 சிலை 10 ஆம் நாள் (25-12-94) ஞாயிற்றுக் கிழமை அன்று திருப்பத்தூர் ஆண்டாள் காமோதிரன் திருமண மண்டபத்தில், ஆங்கிலமும், இந்தியும் 'அரியணையில்? தமிழ் உணர்வாளர்கள் தடா சிறையில்? கொள்ளைக்கும், விளம்பரத்திற்கும் தமிழின பெயரால் தஞ்சையில் மாநாடு! என இடித்துரைத்து பு.இ.மு. மாநாடு தொடங்கப் பெற்றது. நிகழ்ச்சியில் தோழர். மாதவன் (பு.இ.மு) தலைமை தாங்கினார். நிகழ்வின் போது உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் தலைவர். தமிழறிஞர். பாவலரேறு ஐயா அவர்கள் உரையாற்றினார்கள். திருவாளர்கள் புலவர். த. சுந்தரராசு, வே. பொன்னையன், பொ. வே. பக்தவத்சலம் மற்றும் பலரும் உரையாற்றினார்கள். தோழர் பெரியண்ணன் (பு.இ.மு.) நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

1(அ). கோப்பெருந்தேவி - சேகர் வாழ்க !

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை அமைச்சரும் தென்மொழியின் மேனாள் உறுப்பாசிரியருமான மு.தமிழ்க்குடிமகன் - வெற்றிச்செல்வி வாழ்விணையர் மகள் செல்வி கோப்பெருந்தேவிக்கும், திரு. மாயழகு - தெய்வானை வாழ்விணையர்

மகன் செல்வன் சேகருக்கும் தி.பி.2027 துலை 29 அன்று (14-11-96) சென்னை - தேனாம்பேட்டைக் காமராசர் நினைவரங்கத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் திருமணவிழா சிறப்புற நடைபெற்றது. மணமக்கள் நீடுவாழத் தென்மொழி வாழ்த்துகிறது.

2(அ). மோ. செந்தில்குமார் - ம. மங்கை வாழ்க !

தி.பி. 2027 நளி - 6-ஆம் நாள் (21/11/96) வியாழக்கிழமை அன்று ஈரோடு கச்சேரித் தெரு மண்டபத்தில் நெடுநாளைய தென்மொழி அன்பர் கோ.மனோகரன் - மான்விழி - இணையரின் மகள் செல்வி ம.மங்கைக்கும், மோகனராசு அவர்களின் மகன் செல்வன் மோ. செந்தில்குமாருக்கும் திருமணம் சிறப்புற நடைபெற்றது. மணமக்கள் நீடு வாழத் தென்மொழி வாழ்த்துகிறது.

3(அ). மரு.அ. அன்பரசு - மரு. உசாநந்தினி வாழ்க !

தி.பி. 2027 நளித் திங்கள் 9-ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை அன்று (24-11-96) கரூர் கோவைச் சாலைக் கொங்கு திருமண மன்றத்தில் நீண்டநாள் தென்மொழி அன்பர் கா.அரங்கசாமி - சரசுவதி - இணையரின் மகன் செல்வன் மருத்துவர். அ.அன்பரசு, சு.கு.க. மணி - செகதாம்பாள் இணையரின் மகள் செல்வி. மருத்துவர். உசாநந்தினி - ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி சிறப்பாக நடந்தேறியது. மணமக்களைத் தென்மொழி வாழ்த்துகிறது.

4(அ). தமிழரிமா - தமிழ்ச்செல்வி வாழ்க !

தி.பி. 2027 துலை 29 ஆம் நாள் (14-11-96) சென்னை முத்தமிழ் நகர் செல்வன் தமிழ் அரிமாவு(சு.க.இரமேசு)க்கும், செல்வி தமிழ்ச் செல்வி (இராம செல்வி)க்கும், திண்டிவனம் திருமகள் திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது. மாலை 6 மணிக்கு சென்னை எருக்கஞ்சேரி காமராசர் மாளிகையில் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

அன்னை தாமரை பெருஞ்சித்திரனார், சொல்லாய்வு அறிஞர் அருளியார், திருவாட்டி இறை. பொற்கொடி, திருவாளர்கள் தமிழரசன், தமிழோசை முதலானோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இறுதியில் தேனிசைச் செல்லப்பாவின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

5(அ). குழித்தலைத் தமிழ்க் 'கா.சு' நினைவு இலக்கியக் குழு ஆண்டு விழா

பல்கலைக் குரிசில் கா.சுப்பிரமணியனார் 109 ஆம் ஆண்டு

பிறந்த நாள் மற்றும் தமிழ்க் 'கா.சு.' நினைவு இலக்கியக் குழு 32-ஆம் ஆண்டு விழா குழித்தலை காவேரி நகர் அறிஞர் அண்ணா குமுகாய மன்றத்தில் தி.பி. 2027, நளி 8, 9 காரி, ஞாயிறு (23, 24-11-96) ஆகிய நாட்களில் சிறப்புற நடைபெற்றது.

நளி 8 காரியன்று திருக்குறள் முற்றோதல், 'தமிழா இது கேளாய்' என்னும் கருத்தரங்கம், ஒக இருக்கைப் பயிற்சி, கலை நிகழ்ச்சி, 'அறிவு வளர்ச்சிக்கு ஆக்கம்' என்னும் பாவரங்கம், 'தமிழ் காத்த பெரியவர்கள்' என்னும் கருத்தரங்கம் ஆகியன நடைபெற்றன.

மறுநாள் ஞாயிறன்று 'என்றும் துலங்கும் இன்பத் தமிழ்' பற்றிய ஆய்வரங்கம், மாணவர்களுக்குப் பரிசளிப்பு, 'ஏட்டில் எழுதாப் பாடல்கள்' பற்றிய தமிழிசையரங்கு, 'நோயில்லா வாழ்வு' பற்றிய சித்தமுறைப் பண்டுவம், பாராட்டு - பட்டயமளிப்பு நிகழ்ச்சி, பட்டிமண்டபம் ஆகியவை நடைபெற்றன.

நிகழ்ச்சிகளில் புலவர் இளங்குமரனார், முனைவர் திருமுருகன், முனைவர் கடவூர் மணிமாறன், புலவர் நாவை சிவம் உள்ளிட்ட தமிழறிஞர்கள் பலர் பங்கேற்றனர். புலவர் இறைக்குருவனார், ஆய்வரங்கத்தில் 'இக் காலத் தமிழ்' பற்றியும் பட்டயமளிப்பு நிகழ்ச்சியில் பாராட்டியும் உரையாற்றினார்.

அனைத்து ஏற்பாடுகளையும் தமிழ்க் 'கா.சு' இலக்கியக் குழு நிறுவனர்களான தமிழ்ச்சுடர் இனமுருகு பொற்செல்வி - பொற்செல்வி இளமுருகு வாழ்விணையர் மிகச் சிறப்பாகச் செய்திருந்தது குறிப்பிடத் தக்கது.

அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

இன்றைய நிலையில் 'தென்மொழி' இதழ் விற்பனைக் கணக்கிலும், தென்மொழி நாள்காட்டி, நூல்கள், மலர்க் கணக்கு நிலைகளிலும் தென்மொழி அன்பர்களும் முகவர்களாக இருப்பவர்களும் பெருமளவில் பட்டியல் தொகைகளை நிலுவையாக வைத்திருக்கிறார்கள். அவ்வன்பர்களுக்குப் பலமுறை நினைவூட்டு மடல்கள் விடுத்தும் அமைவாகவே இருக்கின்றார்கள். தென்மொழியின் தொடர்ச்சியான வெளியீடு, நூறாசிரியம் வெளியீடு, ஐயா அவர்களின் நினைவு மலர் வெளியீடு ஆகிய தவிர்க்க இயலாத இவற்றால் மிகவும் பொருளியல் சிக்கலாக இருக்கும் இந்நிலையில் தொகை விடுத்து வைத்தால் மிகவும் பயனுடையதாக இருக்கும் என்பதைத் தென்மொழி அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆதலின், அன்பர்கள் நிலுவைத் தொகைகளை விடுத்துவைத்து அடுத்து வருகின்ற முயற்சிகளுக்குப் பெரிதும் துணை நிற்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

– அமைச்சர், தென்மொழி

ஆய தமிழ்க் கவலைகள் அறுபத்து நான்கு

முனைவர் ஆறு. அழகப்பன்

1. தமிழ்நாட்டில் தமிழ்ஆட்சி மொழி ஆகவில்லையே!

2. தமிழ் பயிற்று மொழியாக, சரியான முயற்சி மேற்கொள்ளவில்லையே!

3. கோயில்களில் தமிழிலேயே வழிபாடு செய்யப்படவில்லையே!

4. பெற்றோர்கள் குழந்தைகளுக்குத் தமிழில் பெயர் சூட்ட எண்ணவில்லையே!

5. இந்திய அரசு தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வில்லையே!

6. தமிழ்ப் படைப்பாளிகள் யாரும் 'நோபல்' பரிசு பெறவில்லையே!

7. விளம்பரப் பலகைகள் தமிழ்நாட்டில் தமிழில் எழுதப்படவில்லையே! எழுதிய சிலவும் நல்லதமிழில் இல்லையே!

8. தமிழர்கள் உரையாடல்களில் எண்பது விழுக்காடு ஆங்கிலமும், பிற மொழியும் கலந்ததே பேசுகிறார்களே!

9. தமிழ்மக்கள் எழுத்துச் சீர்திருத்தத்தைப் பற்றிப் புரிந்து கொள்ளவில்லையே!

10. தமிழாசிரியர்களே வருகைப் பதிவிலும், சம்பளப் பட்டியலிலும் ஆங்கிலத்தில் கையெழுத்து இடுகின்றனரே!

11. இலக்கியக் கூட்டங்களுக்குக் கூட்டமே வருவதில்லையே!

12. தொலைக்காட்சி தமிழ்ப் பண்பாட்டைச் சிதைக்கும் களமாகி விட்டதே!

13. மக்கள் தொடர்புக் கருவிகளில் பிறமொழிகள் ஊடுருவி விட்டனவே!

14. தமிழ்ப் பாடத் திட்டங்களில் மறுமலர்ச்சி இல்லையே!

15. தமிழ்ப் படித்தவர்கள் தமிழ்ப்பணி செய்யாமல், வேறு பணிகளைச் செய்கின்றனரே!

16. தமிழிசை சிலை மாதத்தில் மட்டுமே முழங்கும் நிலை இருந்து, இப்போது அதுவும் குறைந்து வருகிறதே!

17. பெயருக்கு முன்னால் முகப்பெழுத்துகளை ஆங்கில எழுத்தாக எழுதுகின்றனரே!

18. தமிழறிஞர்கள் தமிழ்ப் பண்பாட்டுச் செயலராக வர முடியவில்லையே!

19. தரமான இதழ்களைப் புரட்டிப் பார்ப்பவர் எண்ணிக்கை நாளும் குறைந்து வருகிறதே!

20. நடிகர்களுக்கும், அரசியல் தலைவர்களுக்கும் உள்ளது போல் தமிழறிஞர்களுக்கு வரவேற்பு இல்லையே!

21. மழலையர் பள்ளிகளிலிருந்தே தமிழ், பாடமொழியாக வில்லையே!

22. ஆங்கிலத்தைப் பெயரளவில் சில தமிழ் அறிஞர்கள் எதிர்த்து விட்டுத் தம் பிள்ளைகளை ஆங்கிலப் பள்ளிகளில் சேர்க்கின்றனரே!

23. தனித்தமிழ் படித்தவர்களுக்கு அளிக்கப்பட்ட புலவர் பட்டம் பி.லிட். என்றாகி விட்டதே!

24. யார் யார் பெயரிலேயோ மாவட்டம் அமைந்த பின்னும் தமிழிசை வளர்த்த வள்ளல் அண்ணாமலை பெயரை ஒரு மாவட்டத்திற்கும் சூட்டவில்லையே!

25. தமிழ் வாரியம் ஒன்று ஏற்படுத்தவில்லையே!

26. அருந்தமிழ்த் தொண்டாற்றிய அடிகளார் இறப்பிற்கான இரங்கலும் அரசியலாகிவிட்டதே!

27. தமிழறிஞர்கள் படங்களைத் தமிழ்ப் படித்தவர்கள் வீடுகளில் கூட காணோமே!

28. தனித்தமிழ் இயக்கம் வெற்றிபெற வில்லையே!

29. இதழ்களில் விளம்பரங்களில் தமிழ் எழுத்து தவிர வேற்றுமொழியில் தமிழ்ப் படுத்தப்படாமல் வெளியாகின்றனவே!

30. திருக்குறள், தேசிய நூலாக ஆக்கவில்லையே!

31. அயல்மொழிப் பலுக்கலுக்குக் கண்ட கிரந்த எழுத்துகளைத் தமிழறிஞர்கள் ஏற்றுக்கொள்ளவில்லையே!

32. தமிழைப் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லையே!

33. திறந்த வெளிப் பல்கலைக் கழகத்தில் இரண்டாண்டுகளில் அடிப்படைக் கல்வியற்றுத் தமிழ் முதுகலைப் பட்டம் பெற வழிவகுக்கப் பட்டுவிட்டதே!

34. தமிழ் நாட்டில் அழைக்கப்படும் வடமொழி ஊர்ப் பெயர்கள்

தமிழாக்கப் படவில்லையே!

35. தமிழ்நாட்டில் பற்பல ஊர்ப்பெயர்கள் டேஞ்சூர் என்பதுபோல ஆங்கிலத்தில் திரித்து ஒலிக்கப்படும் நிலை நீடிக்கிறதே!

36. தமிழ்த் திரைப்படங்களுக்கு ஆங்கிலத் தலைப்பு வைக்கின்றனரே!

37. தமிழ் இதழ்களுக்கு ஆங்கிலப் பெயர் வைக்கின்றனரே!

38. 'சாகித்திய அகாதமி'யில் அண்ணாவின் வரலாற்றை வெளியிடத் தமிழ்ப் பேராசிரியர்கள் இருவர் உடன்படவில்லையே!

39. முழுமையான தமிழக வரலாறு முறைப்பட எழுதப்பட வில்லையே!

40. தொழில்முறை மேடைநாடகக் குழுக்கள் மறைந்து விட்டனவே!

41. பழந்தமிழர்களைப் போலத் தமிழ் அமைப்புகளிடையேயும் ஒற்றுமை இல்லையே!

42. ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு காட்டுவதில் ஒருமைப்பாடு இல்லையே!

43. பொருள் நெருக்கடியால் தமிழ்ப் பல்கலைக் கழகம் வளர்ச்சி குன்றுகிறதே!

44. நல்ல தமிழிலக்கியங்கள் அயல்மொழிகளில் மொழி பெயர்க்கப்பட வில்லையே!

45. உலகத் தமிழ் மாநாட்டிற்குத் தமிழறிஞர்களை வரச்சொல்லித் திருப்பி அனுப்பிவிட்டார்களே!

46. தமிழ் விருதுகள் பெறுவதற்குப் பரிந்துரை தேவைப்படுகிறதே!

47. தமிழைப் படித்தோரை மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக அமர்த்திய மரபு மாறிவிட்டதே!

48. தமிழ் அகராதியை வாங்குபவர்களும், பயன்படுத்துபவர்களும் எண்ணிக்கையில் குறைந்துவருகின்றனரே!

49. மங்கிய 'சாதி' உணர்வு மீண்டும் மாவட்டப் பெயர்களில் ஓங்கி வருகிறதே!

50. அறிவியல் தமிழை வளர்ப்பார் ஆதரிக்கப்பட வில்லையே!

51. பிறநாட்டு நல்லறிஞர் அந் நூல்கள் தமிழில் மொழி

பெயர்க்கப்பட வில்லையே!

52. தமிழ்ப்பற்று மிக்க தலைவர்கள், தமிழறிஞர்கள், தமிழாசிரியர்கள்கூடத் தங்கள் இல்லத் திருமண அழைப்பிதழ்களை ஆங்கிலத்திலேயே அச்சடிக்கின்றனரே!

53. மருத்துவப் படிப்பிலும், பொறியியல் படிப்பிலும் சில தாள்களைத் தமிழில் நடத்துவது என்ற முடிவு கைவிடப் பட்டுவிட்டதே!

54. அரசவைப் பாவலர் என்கிற சிறப்பு யார்க்கும் தரப்படவில்லையே!

55. சிறந்த நூல்களைத் தமிழக அரசு வெளியிடும் முயற்சி இல்லையே!

T · 5849

56. உள்ளூர் அஞ்சல் முகவரிகளைக்கூட ஆங்கிலத்திலேயே எழுதிவருகிறார்களே!

57. தமிழ்க் கல்லூரிகள் எல்லாம் வருவாய் கருதி, கலைக் கல்லூரிகளாக மாற்றப்படுகின்றனவே!

58. அறிவியல் கலைச்சொல்லாக்கத் திட்டங்கள் முழுமையாகப் பணிமுடிக்கப் பெறவில்லையே!

59. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம் கைவிடப்பட்டுவிட்டதே!

60. திருப்பதிக் கோயில் சிறந்த தமிழ்நூல்களை வெளியிடப் பொருளுதவி செய்வது போல் தமிழகத்தின் எந்த கோயிலும் தமிழ் நூல்கள் வெளிவர உதவவில்லையே!

61. தமிழறிஞர் பிள்ளைகட்கு என ஏற்படுத்தப் பெற்ற பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரி இடங்கள் முறையாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லையே!

62. தமிழ்க் கவிதைகளில் புதுக்கவிதை தோன்றியது போலத் தமிழிசையில் புதுப் பண்கள் தோன்றவில்லையே!

63. தேவாரம், திருநாலாயிரம் ஆகிய வழிபாட்டு இலக்கியங்களை முறைப்படி ஓதும் ஓதுவார்கள் ஆதரவு இல்லாததால் நலிகின்றனரே!

64. வேதநாயகர், அருணாசலக் கவிராயர், கோபால கிருட்டிண பாரதியார், அண்ணாமலை (இரெட்டி)யார் போலத் தமிழிசைப் பாடல்களை எழுதுவார் இல்லையே!

நமக்கு வந்த மடல்கள்.

O: *1609* : அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய அம்மா அவர்களுக்கு, வணக்கம். பாவலரேறு ஐயா அவர்களின் மறைவு தமிழுக்கும், தமிழினத்திற்கும் பேரிழப்பாகும். அவர்களுடைய இடத்தை வேறு எவரும் நிறைவு செய்ய இயலாது. எனினும், அவர் மறைவுக்குப் பின் தென்மொழி இயக்கம் என்னவாகுமோ என்று கவலுற்ற நேரத்தில் அவர் கொள்கைவழிச் செயல்பட உறுதிபூண்டு, தாங்களும் இறை - அவர்களும் தென்மொழி இதழைத் தொடர்ந்து நடத்தி ஐயா அவர்களின் உரைகளையும் எழுத்துகளையும் மக்களிடையே கொண்டு சென்று பணியாற்றுவது மனத்துக்கு மகிழ்ச்சியையும் ஆறுதலையும் அளிக்கிறது. பாராட்டுகள்! உங்கள் பணி சிறக்கட்டும்.

அன்புடன், கோ. இரத்தினவேல் - நெய்வேலி.

O: 1610 : தென்மொழி அன்னைக்கு, தேன்தமிழ் வணக்கம். நலமுடன் பல்லாண்டு வாழ்க! தென்மொழிக் குடும்பத்தார் எல்லார்க்கும் இனிய வாழ்த்துகள். உசாவல்கள். நலமே சூழ்க!

அம்மா, கடந்த மூவாயிரம் ஆண்டுக் கால வரலாற்றில் மொழி, இனம், நாடு எனும் முந்நிலை மலாச்சிக்கும், வளர்ச்சிக்கும் குறிக்கோள் மாறாமல், நெறிமுறை வகுத்து அதன்படி சரியாகப் பாடாற்றி ஈகவாழ்வு வாழ்ந்தவர் சான்றோரும் போராளியும் ஆகிய நம் அரும்பெறல் ஐயா என்றால் எவராலும் மறுக்க முடியாது. அம் மாமேதையின் வழிகாட்டலில், அவர்தம் அருட்பார்வை வீச்சில், அன்பின் பிணைப்பில் யானும் திளைத்தவன் என்பது நினையும் தோறும் மகிழ்வூட்டக் கூடியது. அவர்தம் செந்நாவினின்றும் முத்துச் சிதறல்கள் எனப் புத்தம் புதியனவாய் வெளிவந்த கருத்துமணிகள் பன்னூற்றுக் கணக்கானவையாகும். அவற்றை ஒலிநாடா வழி எடுத்துப் பேணாதது எங்கள் குறை; எங்கள் அறியாமை என்றுகூடக் கூறலாம்.

தென்மொழி நலப்பாட்டிலும் தமிழ்க்களம் உருவாக்க முயற்சியிலும் எளியவனுக்கு என்றும் பங்கு உண்டு. இயன்றது செய்வேன். காலம் வாய்க்கையில் தங்களையும் நிகழ்ச்சியில் பங்கேற்கச் செய்வேன். சென்னை வரும்போது கட்டாயம் தங்களைப் பார்ப்பேன்.

அம்மா நலமுடன் வாழ்க! ஐயா நினைவுகளை நெஞ்சில் பதிவித்து அவர்தம் கனவை நனவாக்குவோம்!

அன்பின், திருக்குறள். நாவை. சிவம் - மணப்பாறை

O: 1611: அம்மா அவர்களுக்கு வணக்கம்!

ஐயா அவர்களுடன் பழகுவதற்குக் கிட்டிய வாய்ப்புகள் வாழ்வின் ஒப்பற்ற பேறுகள். அவர், தம் வாழ்நாளை இப்படிச் சுருக்கிக் கொள்வார் என எவரும் கனவிலும் எண்ணியதில்லை, அவர் பிரிவால் ஒரு மாபெரும் வெறுமை விரவிவிட்டது. ஆனால் அது விரவக்கூடாது. ஏனெனில் ஐயா அவர்கள் சாவிலும் வாழ்பவர். அவர் உடலே மறைந்தது! உள்ளம் தமிழ் உள்ளவரை தமிழருடன் வாழ்ந்துவரக் கூடியது. ஐயா அவர்களைத் தங்கள் வடிவில் நாங்கள் காண விரும்புகிறோம்! தென்மொழி வடிவில் அவருடன் உறவு கொள்ள அவாவுகிறோம். தங்கள் நற்பணிகள் அனைத்திற்கும் எமது துணை என்றும் உரியது.

தமிழ்க்களத்திற்கும், திருக்குறள் மெய்ப்பொருளுரை வரவுக்கும் இயன்ற ஒத்துழைப்பை விரைவில் நல்குகிறோம்.

- இரணியன்

O: 1612: அன்பும் மதிப்பும்மிக்க அம்மா, வணக்கம்,

தமிழ்க்களத்திற்கு நன்கொடை பெறும் பொறுப்பால் அலைந்து கொண்டுதான் இருக்கிறேன். இத்திங்கள் இறுதியில் ஒருவர் சிறிது தொகை தருவார் எனக் கருதுகிறேன். அதன்பின் திட்டத்தைத் தெரிவிக்கிறேன்.

தென்மொழி ஆண்டுக் கட்டணம் தண்டுவதற்காக 4.12.96 முதல் பல சிற்றூர்களுக்குப் போக இருக்கிறேன். அதோடு கூட தமிழ்க்களம் நன்கொடை தண்டும் பணியையும் சேர்த்துச் செய்வேன். ஊடே ஊடே உடல்நலமில்லாமல் போய் விடுகிறது. சில சிக்கல்கள். எதைப்பற்றியும் கவலைப்படாமல் முடிந்த போதெல்லாம் எடுத்துப் போகிறேன். முழு வெற்றியை பெற வேண்டும் என்ற ஆர்வத்தில் இருக்கிறேன். உடல் நலம் சரியில்லாமையால் நடக்க முடியாமல் போகிறது. வீட்டிலேயே இருந்து மருந்துகளைச் சாப்பிடுகிறேன். சிறிது நலம் பெற்று விட்டேன்.

பணம் தண்டுவதில் ஆர்வம் எனக்கிருப்பது போல மற்றவர்களுக்கும் இருந்தால் பயன் விரைவாகக் கிடைக்கும்.

அதியமான் - தாழையூத்து

தென்மொழி அச்சகம், சென்னை - 600 005. (தொலைபேசி : 854 7829)